வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 20/=


# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 08.02.2022 செவ்வாய்க்கிழமை | இதழ் : 65 | பக்கங்கள் : 16




# இந்தியாவை ஏமாற்றுவதற்கான நகர்வே பீரிஸின் டில்லி விஜயம்!

## மோடி தீர்க்கமாக செயல்படுவார் என விக்னேஸ்வரன் நம்பிக்கை



யாழ்ப்பாணம், பெப்ரவரி 08

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸின் புதுடில்லிக்கான விஜயம் இந்தியாவை ஏமாற்றுவதற்கான மற்றொரு நகர்வாகவே உள்ளது என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸின் தற்போதைய இந்திய விஜயம் தொடர்பாக 'ரைம்ஸ் ஒவ் இந்தியா'வுக்கு கருத்துவெளியிட்ட போதே விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

15

## யாழ்ப்பாணத்தில் 16 தொற்றாளர்கள்

யாழ்ப்பாணம், பெப். 08

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 16 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருவருமாக வடக்கில் நேற்று 17 பேர் புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

யாழ். போதனா மருத்துவமனை, யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடங்களில் நடத்தப்பட்ட பி. சி. ஆர். சோதனையிலேயே இந்த விடயம் வெளியானது.

யாழ். போதனா மருத்துவ மனையில் 83 பேரின் மாதிரிகள் பி. சி. ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்படி,

15



## ஜெய்சங்கருடன் பீரிஸ் நேற்று முக்கிய பேச்சு

### இலங்கை முதலீடு, மீனவர்கள் பிரச்னை குறித்து ஆராய்வு

புதுடில்லி, பெப். 08

இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்று புதுடில்லியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை சந்தித்தார்.

இந்த சந்திப்பின் போது இலங்கையை பலப்படுத்தும் பொருளாதார மற்றும் முதலீட்டு முயற்சிகள் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் எரிசக்தி பாதுகாப்பை மேம் படுத்துவதற்கான மேலதிக

15

## இன்று முதல் வெள்ளி வரை பாராளுமன்ற அமர்வுகள்!

கொழும்பு, பெப். 08

பாராளுமன்ற அமர்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை இடம்பெறவுள்ளது.

பிரதி சபாநாயகரும் குழுக்களின் தலைவருமான ரஞ்சித் சியம்பலாபிட்டிய தலைமையில் நேற்று நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுவில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் தம்மிக தசநாயக்க தெரிவித்தார்.

இதன்படி, 1969 ஆம் ஆண்டு இலக்கம் 1இன் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் மாகாண சபைகள் (முத்திரைவரி மாற்றம்)

15

## வரணியில் துப்பாக்கி சூடு; பொதுமகன் ஒருவர் காயம்!

### 5 எஸ். ரி. எவ்வினர் கைது

தென்மராட்சி, பெப். 08

சிவில் உடை தரித்த விசேட அதிரடிப் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கையில் காயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தையடுத்து சிவில் உடை தரித்து துப்பாக்கி சூட்டை நடத்திய விசேட அதிரடிப் படையினர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

சம்பவம் குறித்து மேலும் அறியவருவதாவது,

வரணி - இயற்றாலை பகுதியில்

15

## தொற்றாளர்கள் எண்ணிக்கை உயர்வு வைத்தியசாலைகளில் இடநெருக்கடி!

கொழும்பு, பெப். 08

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் திடீர் அதிகரிப்பு காரணமாக மருத்துவமனைகளில் இடவசதி மற்றும் படுக்கைகள் இல்லாமல் இயங்குகின்றன என சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வாரங்களாக கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது, அந்த எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்திருப்பதாகத் தெரிகிறது என்று அவர் நேற்று கூறினார்.

ஏனைய நோயாளிகளுக்கு ஏற்படும் அசௌகரியத்தைத் தவிர்ப்பதற்காக, கொரோனா நோயாளிகளுக்காக 6,000 படுக்கைகள் பயன்பாட்டில் உள்ளன. 14,000 படுக்கைகள் தயார் நிலையில் வைப்பதற்கான ஏற்பாடுகளை மருத்துவமனைகள்

15

## தொற்றுக்கு 26 பேர் மரணம்!

கொழும்பு, பெப். 08

நாட்டில் கொரோனா தொற்றால் நேற்று முன்தினம் 26 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நேற்று உறுதிப்படுத்தினார்.

இதன்படி, 30 வயதுக்கு கீழ் 2 ஆண்கள், 30 - 59 வயதுக்குள் 4 ஆண்கள், இரு பெண்கள் என 6 பேர், 60

15

## பயங்கரவாத சட்டத்தில் கைதான 8 பேருக்கு வவுனியா மன்று பிணை!

வவுனியா, பெப். 08

குண்டுகளை தம் வசம் வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தில் 2019 ஆண்டு கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த 8 பேருக்கு வவுனியா நீதிமன்றம் நேற்று பிணை வழங்கியுள்ளது.

2019 ஜனவரி மாதம் 5ஆம் திகதி புளியங்குளம் பொலிஸாரால் கிளைமோர் வைத்திருந்தார்கள் என்ற

15

## யாழ்.பல்கலைக்கழகத்தின் இரு மாணவிகள் மோதல்!

### ஒருவர் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், பெப். 08

யாழ். பல்கலைக்கழகத்தின் இரு மாணவிகள் மோதிக்கொண்டதில் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப் பிரிவைச் சேர்ந்த மாணவி ஒருவரும், மருத்துவபீடத்தைச் சேர்ந்த மாணவி ஒருவரும் கோப்பாய் பொலிஸ்

15

## நாடு முடக்கப்படாது!

கொழும்பு, பெப். 08

நாட்டில் மீண்டும் பயணக் கட்டுப்பாடுகளை விதிக்கும் திட்டம் எதுவும் இல்லை இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

ஊடக சந்திப்பொன்றில் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பயணங்களைக் கட்டுப்படுத்துவீர்களா என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று பரவி வரும் நிலையில், அனைத்து மக்களும் சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை கடைப்பிடித்து பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## 'பயங்கரவாத கைதி'களுக்கு பிணை; ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்பு

கொழும்பு, பெப். 08

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை பிணையில் விடுவிக்கப்படுவதை ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்றுள்ளது.

கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய அலுவலகத்தின் ருவிட்டர் பக்கத்திலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த ருவிட்டர் பதிவில்,

பயங்கரவாத தடைசட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் அண்மையில் பிணையில் விடுவிக்கப்பட்டமையை வரவேற்கிறோம். பயங்கரவாத

15

## இப்படியும் நடக்கிறது...!

எண்பதுகளின் ஆரம்பத்தில் வடக்கில் முப்பதுக்கும் அதிகமான ஆயுத இயக்கங்கள் இயங்கின.

தமிழ் அரசு, தமிழ்க் காங்கிரஸ் என்று இரண்டு அரசியல் கட்சிகள் மாத்திரமே இருந்தன, அவை இரண்டும் ஒன்றாகி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியது.

தமிழ் மக்களின் பிரச்னைக்கு தமிழீழம் ஒன்றுதான் தீர்வு என்று முடிவெடுத்து, அதற்கான மக்கள் ஆணையையும் பெற்ற பின்னர், அவர்கள் மக்கள் ஆணைப்படி தமிழீழத்தை அடைய எந்த முயற்சியையும் செய்யவில்லை என்று விரக்தியடைந்த இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் நாட்டம் கொள்ளத் தொடங்கியிருந்த காலம் அது.

ஆயுத இயக்கம் ஒன்றாகி, இரண்டாகி, கடைசியில் முப்பதையும் கடந்திருந்தது.

எல்லோருடைய இலட்சியமும் ஒன்றாக இருந்தபோதிலும், ஒவ்வொருவரும் வெவ்வேறு இயக்கங்களாக பிரிந்திருந்து போராடிக்கொண்டிருந்தனர்.

ஓர் இயக்கம் சாவகச்சேரியில் பொலிஸ் நிலையத்தை தாக்கி அழித்ததும் நமது மக்கள், "அடித்தால் அவனைப் போல அடிக்கவேணும்" என்று அந்த இயக்கத்தை தலையில் தூக்கி கொண்டாடினர்.

பின்னர் மற்றுமோர் இயக்கம் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தை தாக்கியதும், இதுதான் அடி. அடித்தால் இப்படித்தான் அடிக்கவேணும் என்று இந்த இயக்கத்தை கொண்டாடத் தொடங்கினர்.

இதனால், யார் தாக்குதல்களை நடத்துகிறார்களோ அவர்களை மக்கள் கொண்டாடிக் கொண்டிருந்ததால், இயக்கங்களிடையே யார் எப்படித் தாக்குவது என்பதில் போட்டி ஏற்படலாயிற்று.

கடைசியில் இந்தப் போட்டிகளே இயக்கங்களிடையேயான மோதல்களாகி, ஒவ்வொன்றாக காணாமல்போயின அல்லது காணாமல் போகச் செய்யப்பட்டன.

இயக்கங்களை ஒன்றிணைக்க அவ்வப்போது முயற்சிகள் நடந்த போதிலும், அவை படங்களை எடுத்துக்கொண்டதுடன் மறைந்துபோயின. கடைசியில் ஓர் இயக்கம் மாத்திரமே தாம் இல்லாமல்போகும் வரை கடைசிவரை களத்தில் நின்றது. கடைசியில் ஆயுதப் போராட்டம் முற்றாக மௌனித்துப்போனது. அது பற்றிய - அந்த தோல்வி பற்றிய பாடங்களை இன்னமும் நாம் விஞ்ஞானபூர்வமாக ஆய்வு செய்ததாகத் தெரியவில்லை.

விடுதலைப் புலிகள் காலத்தில் எமது அரசியல் இயக்கங்கள் இவ்வாறு பிரிந்திருப்பது பலவீனமானது என்பதை புரிந்துகொண்டதால், பிரிந்து கிடந்த அரசியல் இயக்கங்களை ஒன்றிணைத்து பலமான ஓர் அமைப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கிவிட்டு சென்றார்கள். அந்த அமைப்பு அவர்களுக்கு பிறகு இப்போது பல வேறு துண்டுகளாக பிரிந்து சிதறிக் கொண்டிருக்கின்றது.

இந்நிலையில், இப்போது சிதறிக்கிடக்கும் அரசியல் கட்சிகள் எல்லாமே போட்டிபோட்டுக்கொண்டு போராட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கின்றன.

ஐ. நாவுக்கு தனித்தனியாக கடிதங்களை அனுப்பிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கட்சிகளும் தனி ஆவர்த்தனம் செய்கின்றன என்று கவலையடைந்தால், இப்போது அந்தக் கட்சிகளுக்குள்ளும் ஒவ்வொருவரும் தனித்தனியாக போராட்டங்களை நடத்தத் தொடங்கியிருக்கின்றனர்.

தனித்தனியாக ஐ. நாவுக்கு கடிதம் அனுப்புகின்றனர்.

இப்போதெல்லாம் நமது தலைவர்கள் ஒவ்வொரு நாளும் இரவில், விடிகின்றபோது என்ன போராட்ட அறிவிப்பை வெளியிடலாம் என்றே சிந்திக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

அவர்களின் இந்த அலப்பறைகளை முடிவுக்கு கொண்டவர, அதற்காகவே மக்கள் போராட்டங்களை தொடங்க வேண்டிய கட்டாயம் ஒன்று ஏற்படுவதை தடுக்கமுடியாது.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு, அதனை அடைவதற்கான வழி வரைபடம் ஒன்றை நமது சிவில் சமூகத்தினரும், புத்திஜீவிகளும் கூட்டாக தயாரிக்கவேண்டும். அதன் பின்னர் அந்த வழித்தடத்தில் பயணிக்க தயாராக இருக்கின்ற கட்சிகளை இணைத்துக்கொண்டு, பலமான அமைப்பாக தமிழர்கள் பயணிக்கவேண்டும். இதில் பங்குகொள்ள மறுக்கின்ற கட்சிகளை மக்கள் தாங்களாகவே காணாமல் ஆக்கிவிடுவார்கள்.

இன்றைய அவசிய தேவை இதுதான். இல்லையெனில் நமது இனத்தில் அழிவை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது!

- ஊர்க்குருவி

# தகராறு படுகொலையில் முடிந்தது இராகலையில் இனமுறுகல் நிலை!

## பெருமளவு பொலிஸார் குவிப்பு

ஹற்றன், பெப். 08

**இராகலை மேற்பிரிவு தோட்டத்தில் தாக்குதல் சம்பவம் ஒன்றில் வெட்டு காயங்களுக்கு உள்ளானவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதனால், இராகலை மேல் பிரிவு தோட்டத்தில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.**

இரு இனங்களை சேர்ந்த நண்பர்களிடையே வீதி அமைப்பது தொடர்பில் கடந்த மாதம் 29ஆம் திகதி பிரச்னை ஏற்பட்டது. இந்த முரண்பாடு வாள்வெட்டில் முடிந்தது. இந்த சம்பவத்தில் பெரும்பான்மை இனத்தை சேர்ந்த நபர் சிறுபான்மை இனத்தை சேர்ந்த நபரை வாளால் வெட்டியுள்ளார்.

இதில் படுகாயமடைந்த நபர் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இந்நிலையில், அவர் 5ஆம் திகதி இரவு மரணமானார்.

இந்தச் சம்பவத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான சந்திரசிறி தயாளன் (வயது 30) என்பவரே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவரை பொலிஸார் கைது செய்து நீதிமன்ற அனுமதியுடன் விளக்கமறியலில் வைத்து விசாரித்து வருகின்றனர்.

இந்த நிலையில், வெட்டப்பட்ட நபர் உயிரிழந்தமையை அடுத்து இராகலை மேற்பிரிவு தோட்டத்தில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த சம்பவம் இரு இனங்களுக்கு இடையில் மோதல் சம்பவமாக மாறிவிடக் கூடும் என்ற அச்சத்தில் அந்தப் பகுதியில் பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

# பிரதமர், ஜனாதிபதி தலைமையில் ஆளும் கட்சியின் உறுப்பினர் கூட்டம்

கொழும்பு, பெப். 08

ஆளுங்கட்சி உறுப்பினர்கள் குழுக் கூட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தலைமையில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

அலரி மாளிகையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், அடுத்த வார பாராளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

மின் நெருக்கடிக்குத் தீர்வு காணல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களைப் பயன்படுத்துதல், ஏற்றுமதிப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இதன் போது விவாதிக்கப்பட்டன.

எதிர்காலத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

நாட்டின் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டம் தொடர்பில் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ விசேட விளக்கமளித்தார். (ஐ)

# கிழக்கு பிரதம செயலராக வணிகசிங்க மீள நியமனம்

கொழும்பு, பெப். 08

கிழக்கு மாகாண பிரதம செயலாளராக, துசித்த பி. வணிகசிங்க மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை ஜனா திபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து அவர் நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டார்.

இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரியான துசித்த பி. வணிகசிங்க, கேகாலை மற்றும் அம்பாறை மாவட்டங்களின் செயலாளராக கடமையாற்றியுள்ளார். அத்துடன், அரச நிறுவனங்கள் பலவற்றிலும் பல்வேறு பதவி நிலைகளை வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மாட்டிறைச்சியுடன் மூன்று பேர் கைது

கொழும்பு, பெப். 08

ரங்கல நகரத்தில் பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது கெப் ரக வாகனத்தில் எருமைமாட்டு இறைச்சியை கொண்டு சென்ற மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது குறித்த சந்தேக நபர்களிடமிருந்து 60 கிலோ 500 கிராம் எடையுடைய எருமை இறைச்சி மீட்கப்பட்டுள்ளது.

மேலும் அவர்கள் வசம் வைத்திருந்த உள்நாட்டு துப்பாக்கிகள் இரண்டும், 12 ரவைகளும் மீட்கப்பட்டுள்ளன.

தெஹிவளை மற்றும் இரத்மலானை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 40 மற்றும் 65 வயதுடைய மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# ஆளும் கட்சியின் கூட்டத்தில் எதிர்க்கட்சி எம். பி. பங்கேற்பு

கொழும்பு, பெப். 08

ஆளும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்றக் குழுக்கூட்டம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதில், ரிஷாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அநுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் கலந்துகொண்டார்.

இவர், அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது, ஆளும்கட்சியினருடன் இணைந்து ஆதரவாக வாக்களித்தார் என்பது நினைவுகூரத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
08.02.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், தை 26

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# பீரிஸின் இந்திய விஜயம்?

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ், மூன்றுநாள் விஜயமாக இந்தியா சென்றிருக்கின்றார். இது அவரது முதல் வெளிநாட்டு பயணம். இந்த மாதம் இறுதிப்பகுதியில் ஜெனிவா கூட்டத் தொடர் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையிலேயே, பீரிஸின் பயணம் இடம்பெற்றிருக்கின்றது. இலங்கைக்கும் - இந்தியாவுக்கும் இடையில் மீளவும் உறவுகளை கட்டியெழுப்பும் முயற்சியில் கொழும்பு ஈடுபட்டிருக்கின்றது. மிலிந்த மொறகொட இந்தியாவுக்கான தூதுவராக பொறுப்புக்களை ஏற்றபோது, இழுபறிநிலையிலிருக்கும் இரு தரப்பு ஒப்பந்தங்களை விரைவில் முடிவுக்கு கொண்டுவரவுள்ளதாக கூறியிருந்தார். அவர் கூறியது போன்றே, மேற்கு கொள்கலன் முனை விவகாரம், திருகோணமலை எண்ணெய்க்குதங்களுக்கான உடன்பாடு ஆகியவை முடிவுக்கு கொண்டுவரப்பட்டன. அதேபோன்று, இலங்கையின் பொருளாதார நெருக்கடியை சமாளிக்கும் வகையில் இந்தியா கடனுதவிகளையும் வழங்கிவருகின்றது.

ஆனால், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இலங்கை இதுவரையில் எந்தவொரு நகர்வையும் மேற்கொள்ளவில்லை. அதே வேளை தமிழர் பிரச்னையானது, முற்றிலும் இலங்கையின் உள்விவகாரம் என்பது போலவே மிலிந்த மொறகொட அபிப்பிராயங்களை வெளியிட்டுவருகின்றார். மிலிந்த மொறகொட, ஜனாதிபதிக்கு வழங்கிய மூலோபாய ஆவணத்திலும் தமிழர் பிரச்னை தொடர்பில் எந்தவொரு விடயமும் இல்லை. தமிழர் பிரச்னையில் இந்தியாவுக்கே உரித்தான தலையிடும் தகுதியை கொழும்பு புறக்கணிக்கவே விரும்புகின்றது. அதாவது, உங்களது தேவைகளை நாங்கள் கவனிப்போம் - அதற்கு பதிலாக தமிழர் பிரச்னையில் நீங்கள் தலையீடு செய்ய வேண்டாம் என்பதுதான் தற்போதைய ஆட்சியாளர்களின் நிலைப்பாடு. இதனை சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவர்கள் மறைமுகமாக சுட்டிக்காட்டத் தவறுவதில்லை. இந்தியாவை முக்கியமாக பிரதமர் மோடி தலைமையிலான பி. ஜே. பியை திருப்திப்படுத்துவதன் ஊடாக, 13ஆவது திருத்தச் சட்டத்தையும் இல்லாமல் ஆக்கலாம் என்பதே ராஜபக்ஷ - மொறகொட - பீரிஸ் கூட்டின் திட்டமாக இருப்பதாகத் தெரிகின்றது.


பி.ஜே.பியின் பின்தளமான, ஆர். எஸ். எஸ், அதேபோன்று பி.ஜே.பிக்கு நெருக்கமான சிந்தனைக் கூடங்களை பயன்படுத்தி இந்த விடயத்தை வெற்றிகொள்ளலாம் என்பதே மொறகொடவின் நம்பிக்கையாக இருப்பதாகத் தெரிகின்றது. இல்லாவிட்டால், கண்டியில் அமைந்துள்ள சீதா கோவிலிருந்து, இராமர் கோவிலுக்கு கல் சுமக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. பகவத் கீதையின் சிங்கள மொழிபெயர்ப்புடன் மோடியை சந்திக்கச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. இவற்றின் மூலம் தங்களின் திட்டத்தை நிறைவு செய்துவிடலாம் என்னும் அவா ராஜபக்ஷ அணியிடம் தெரிகின்றது. இந்தியாவின் மௌனத்தை யுத்த வெற்றிக்கு பயன்படுத்திக் கொண்டது போல், இந்தியா மௌனமாக இருந்தால், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் குழந்தையான 13ஆவது திருத்தச் சட்டத்தையும் இல்லாமலாக்கி விடலாம் என்பதே இன்றைய ஆட்சியாளர்கள் போடும் இராஜதந்திர கணக்கு.

ஒரு சிறிய நாட்டின் நரி - இராஜதந்திரத்தை, பிராந்திய பலவானான இந்தியாவால் புரிந்துகொள்ள முடியாமல் இருக்குமா? அதிலும் இந்தியாவின் பிராந்திய சக்தி அந்தஸ்த்தை தூக்கி நிறுத்த முற்படும், ஸ்ரீ நரேந்திர மோடி, கொழும்பின் நகர்வை புரிந்துகொள்ள முடியாதவராக இருப்பாரா? 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான, மாகாண சபையை இல்லாமலாக்கும் அல்லது பலவீனப்படுத்தும் கொழும்பின் நரி- நகர்வுகளுக்கு மத்தியில்தான், ஆறு கட்சிகள் இணைத்து, இந்திய பிரதமரிடம் கோரிக்கையொன்றை முன்வைத்திருந்தன.

# சிவாஜி கணேசனின் உற்றதோழியாக விளங்கிய லதா மங்கேஷ்கர்!

**அனந்த் பாலகிட்ணர்**

இந்தியாவின் குரல் என்று வர்ணிக்கப்பட்டதோடு இந்திய அரசின் அதி உயர் விருதான 'பாரத ரத்னா' விருதைப் பெற்ற லதா மங்கேஷ்கர் தென்னிந்திய திரைப்பட தாரகை நடிகர் திலகம் சிவாஜி கணேசனை பெரிதும் மதித்ததோடு தென் னிந்திய கர்நாடக இசை அரசி காலஞ்சென்ற எம். எஸ் . சுப்புலக்ஷ்மி மீதும் பேரன்பு கலந்த மரியாதையைக் கொண்டிருந்தார்.



அறுபதுகளில் சென்னைக்கு வந்தே தமது பாடல்களை ஒலிப்பதிவு செய்திருந்தார் லதா மங்கேஷ்கர்.

ஒருதடவை சென்னைக்கு தமது பாடல்கள் சிலவற்றை பதிவு செய்ய வந்திருந்தபோது நடிகர் திலகம் சிவாஜி கணேசனையும் அவரது குடும்பத்தினரையும் சந்தித்ததை மிகப்பாசத்தோடு நினைவு கூர்ந்திருந்தார் லதா மங்கேஷ்கர்.

சென்னை வந்திருந்தபோது மதுரை மீனாட்சி அம்மன் கோயிலை தரிசிக்க லதா மங்கேஷ்கர் விரும்பியிருந்தார். அத்துடன் வட இந்தியர்கள் பெரிதும் யாத்திரை செய்யும் தென்னிந்திய திருத்தலமான இராமேஸ்வரத்துக்கு தமது குடும்பத்தினர் சகிதம் செல்வதற்கும் லதா மங்கேஷ்கர் விரும்பியிருந்தார்.

இவ்விருப்பத்தை அன்று தென்னிந்திய தமிழ் திரையுலகில் கொடிகட்டிப்பறந்து கொண்டிருந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசனிடம் லதா மங்கேஷ்கர் வெளியிட்டிருந்தார்.

அப்போது மதுரைக்கும் பின்னர் இராமேஸ்வரத்துக்கும் செல்வதற்கான சகல ஏற்பாடுகளையும் சிவாஜிகணேசன் முன்னின்று மேற்கொண்டிருந்தார். தனது செயலாளரோடு லதா மங்கேஷ்கர் மற்றும் அவரது உறவினர்கள் மதுரைக்கும் அங்கிருந்து இராமேஸ்வரத்துக்கும் செல்வதற்கான ஏற்பாடுகளை சிவாஜி கணேசன் செய்திருந்தார். இந்த நீண்ட பயணத்துக்கென தமது இரு மோட்டார் கார்களையும் தனது பிரத்தியேக சாரதிகளையும் சிவாஜி கணேசன் வழங்கியிருந்தார்.

இதுதவிர, செல்லும் வழியில் லதா மங்கேஷ்கரும் அவரது குடும்பத்தினரும் தங்கி இளைப்பாறிச்செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் சிவாஜி கணேசன் மேற்கொண்டிருந்தார்.

சென்னையில் சிவாஜி கணேசனின் விருந்தாளியாக இருந்த பின்னரே அவருடனான நட்பு மேலும் இறுக்கமடைந்திருந்தது என்று லதா மங்கேஷ்கர் சிவாஜியின் மறைவுக்குப் பின்னர் அவரை நினைவு கூர்ந்தபோது குறிப்பிட்டிருந்தார்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் தமது படப்பிடிப்பு மற்றும் மேடை நாடக நிகழ்ச்சிகளுக்காக மும்பாய் சென்றபோதேல்லாம் தமது குடும்பத்தினரோடு தொடர்புகளை ஏற்படுத்தியதாகவும் அப்போது தமது குடும்பத்தினர் அனைவருமே அவர் மீது அன்பு கலந்த மரியாதையை கொண்டிருந்ததாக லதா மங்கேஷ்கர் சிவாஜி குறித்த தமது பதிவொன்றில் குறிப்பிட்டிருந்தார்.

மும்பையில் படப்பிடிப்பிற்காக சிவாஜி கணேசன் வந்திருந்த வேளைகளில் அவர் படப்பிடிப்புகளின் ஒவ்வொரு கட்டங்களின் போதும் களைத்திருந்திருப்பார் என்பதனை அறிந்து அவருக்கு சூடான சூப் பானத்தை தமது தாயார் தயாரித்து அவரிடம் கொடுத்து வரும்படி தம்மிடம் தருவார் என்று லதா மங்கேஷ்கர் தெரிவித்திருந்தார்.


ஒருதடவை சென்னையில் சிவாஜி கணேசனின் இல்லத்தில் விருந்தாளியாக லதா மங்கேஷ்கர் வந்து தங்கியுள்ளார். அப்போது சிவாஜி கணேசனின் பாரியார் கமலாவின் கழுத்தில் இருந்த அழகிய வைர நெக்லஸ் ஆபரணமொன்றை லதா மங்கேஷ்கர் கண்ணுற்று அந்த வைர ஆபரணம் அழகாக இருக்கின்றதென கூறினாராம். அச்சமயம் அதனை கழற்றி லதா மங்கேஷ்கருக்கு கொடுக்கும்படி தமது மனைவி கமலாவிடம் கேட்டுக்கொண்டாராம் சிவாஜி கணேசன்.

லதா மங்கேஷ்கர் ஹிந்தி திரையுலகில் கோடானு கோடியாக பணம் சம்பாதித்தவர். அதேபோல நடிகர் திலகம் சிவாஜிகணேசனும் எண்ணிலடங்காத முறையில் தமிழ் திரையுலகில் பணம் ஈட்டியிருந்தார்.

லதா மங்கேஷ்கர் ஹிந்தி மொழியில் மாத்திரமல்லாது தமிழ், சிங்களம், ஆங்கிலம் உட்பட 36 மொழிகளில் முப்பதாயிரம் பாடல்களுக்கும் மேல் பாடியுள்ளார்.

தமது உன்னதமான குரலால் இந்தியாவில் மட்டுமல்லாது உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் கோடானு கோடி ரசிகர்களின் மனம் கவர்ந்த லதா மங்கேஷ்கர் தமது 96ஆவது வயதில் அமரத்துவமடைந்திருந்தார்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
இன்று துணிச்சலாக சில முடிவுகள் எடுத்து நன்மை காண்பீர்கள். நண்பர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். பூர்வீக சொத்து சம்பந்தமான பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கும்.

**இடபம்**
நீண்டகால எதிர்பார்ப்பு நிறைவேறுவதால் மகிழ்ச்சி கூடும். பணியில், தொழிலில் புதிய விஷயங்களை கற்றுக் கொள்வீர்கள். புதிய பொறுப்புகளை ஏற்பீர்கள். வெற்றி பெறும் நாள்.

**மிதுனம்**
வாழ்க்கை பற்றி இன்று புதிய தீர்மானங்கள் எடுப்பீர்கள். மறைமுக விமர்சனங்களை பற்றிக் கவலைப்பட வேண்டாம். உங்களது கவர்ச்சி அம்சமும் அறிவாற்றலும் அதிகரிக்கும்.

**கடகம்**
தாழ்வுமனப்பான்மை வராதபடி கவனமாக இருங்கள். முன்பு இருந்த உடல் அசதி நீங்கும். மனதில் நிம்மதி நிலவும். தொழில், பணியிடத்தில் பிறரிடம் தெளிவாகப் பேசுவீர்கள்.

**சிம்மம்**
வாகனம் அடிக்கடி தொந்தரவு தந்துகொண்டிருந்த நிலை இன்று மாறும். மனதில் தேவையற்ற கற்பனை பயங்கள் வந்து செல்லும். சின்ன சின்ன பிரச்னைகளை பெரிதுபடுத்தாமல் இருக்க வேண்டும்.

**கன்னி**
பணியாளர்கள் கடினமாக உழைத்து நன்மை பெறுவார்கள். கவலைகள் எளிதாக தீர்ந்துவிடும். உங்களின் புகழ் அதிகரிக்கப்போகிறது. தாயாரின் உடல்நலம் முன்பைவிட சிறப்பாக இருக்கும்.

**துலாம்**
குழந்தைகள் மகிழ்ச்சி அடைவர். உங்களுக்கு பாராட்டு கிடைக்கும். வாகனத்தை கவனமாக ஓட்டுங்கள். உறவினருக்கு உதவுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கவலை ஒன்று நீங்கும்.

**விருட்சிகம்**
உங்களுக்கு பாராட்டு கிடைக்கும். செயல்களில் நேர்த்தி அதிகரிக்கும். பிறரிடம் மென்மையாக பதில் சொல்லி நன்மை பெறுவீர்கள். பரபரப்பு நிறைந்த நாள். மற்றவரிடம் கருணை காட்டுவீர்கள்.

**தனுசு**
கோபத்தைக் குறைப்பீர்கள். நண்பர்கள் உங்களுக்கு உதவுவார்கள். வெளிநாட்டில் உள்ளவர்களின் மூலம் நன்மை. குழந்தைகளுக்கு அரசாங்கத்தால் நன்மைகள் உண்டாகும்.

**மகரம்**
குடும்பத்தில் ஒருவருக்கு எதிர்பாராத நன்மை கிடைக்கும். செலவு கட்டுப்படும். உங்களின் கவர்ச்சி அம்சம் அதிகரிக்கும், எதிர்பாராத வகையில் உங்களுக்கு நன்மை ஒன்று கிடைக்கும்.

**கும்பம்**
பணியாளர்களுக்கு எதிர்பாராத வருமானம் உண்டு. மகிழ்ச்சியான நாள். அரசு வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு மகிழ்ச்சி. காதல் திருமணம் கைகூடும். வருமானம் அதிகரிக்கும்.

**மீனம்**
எதிர்பாலின நண்பர் ஒருவர் குடும்பத்துக்கு நன்மை செய்வார். சிறிய வகையில் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டாலும் உடனே சரியாகும். வெளி மனிதர்களால் நன்மை ஏற்படும். மகிழ்வான நாள்.

# தமிழக ஆளுநர் பா.ஜ.கவால் நியமிக்கப்பட்டவர் “நீட்” தேர்வுக்கு எதிராக எப்படி செயல்படுவார்?

## கேள்வி எழுப்புகின்றார் சீமான்

சென்னை, பெப். 08

தமிழக ஆளுநர் பா.ஜ. கவால் நியமிக்கப்பட்டவர். அவர் எப்படி அவர்களுக்கு எதிராகச் செயல்படுவார் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் நாம் தமிழர் கட்சி சார்பாகப் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் கூட்டம் நேற்று மதுரை ஒத்தக்கடை பகுதியில் நடைபெற்றது. இதையடுத்து பேசிய நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், ஆளுநர் நீட் விலக்கு மசோதாவைத் திருப்பி அனுப்பியது குறித்து கருத்து வெளியிட்டார்.

“தமிழக ஆளுநர் பா.ஜ. கவால் நியமிக்கப்பட்டவர். ஆர்எஸ்எஸ் உறுப்பினர். அவர்கள் நீட்டை ஆதரிக்கிறார்கள். அப்படி இருக்கும்போது எப்படி அவர் நீட் தேர்வுக்கு எதிராகச் செயல்படுவார்? செயல்பட மாட்டார். அதுதான் அவர்களது கோட்பாடு.



ஆளுநர் சட்டப்படி செயல்படுகிறார் என்று கூறும் அதிமுக, பா.ஜ.கவுடன் உள்ளாட்சித் தேர்தலில் கூட்டணி வைக்கவில்லை என்றாலும், மத்தியில் பா.ஜ.க. அதிகார மிக்கதாக இருப்பதால் அனுசரித்து செல்ல வேண்டும் என்பதால் பா.ஜ.கவிடம் நயந்து பேசுகிறார்கள்” என சீமான் இதன்போது தெரிவித்தார்.

# ஆளுநரை திருப்திப்படுத்துவதற்கே அ.தி.மு.க. முயற்சித்திருக்கின்றது

## அமைச்சர் மா.சுப்ரமணியன் தெரிவிப்பு

சென்னை, பெப். 08

“எந்த ஆளுநரும் செய்யாத ஒன்றை தமிழக ஆளுநர் செய்திருக்கிறார். இதுதொடர்பாக அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூடிய கூட்டத்தில் அ.தி.மு.க பங்கேற்றிருக்க வேண்டும். கூட்டத்தில் பங்கேற்காமல் அறிக்கை கொடுத்துள்ளனர். இது ஆளுநரை திருப்திப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கையாகத்தான் பார்க்க முடிகிறது” என தி.மு.கவின் தேர்தல் பணிமனையை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் தெரிவித்தார்.

தமிழ்நாட்டு மாணவர்களுக்கு மருத்துவப் படிப்புக்கான நீட் நுழைவுத் தேர்வில் இருந்து விலக்களிக்கும் மசோதாவை ஆளுநர் ஆர்.என்.ரவி, அரசுக்கே திருப்பி அனுப்பியிருந்தார். இதற்க தி.மு.க உள்பட அரசியல் கட்சிகள் பலவும் தங்களின் கண்டனத்தைப் பதிவு செய்தன. இதையடுத்து அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு தி.மு.க அழைப்பு விடுத்தது. இந்தக் கூட்டத்தில் அ.தி.மு.க, பா.ஜ.க ஆகிய கட்சிகள் பங்கேற்கவில்லை.

இந்நிலையில், அமைச்சர் மா.சுப்ரமணியன் திறந்து இது குறித்து செய்தியாளர்களிடம் பேசினார். “நீட் தேர்வு தொடர்பாக அ.தி.மு.கவின் செயல்பாட்டை எப்படிப் புரிந்து கொள்வது எனத் தெரியவில்லை. எந்த ஆளுநரும் செய்யாத ஒன்றை அவர் செய்திருக்கிறார். இதுதொடர்பாக அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூடிய கூட்டத்தில் அ.தி.மு.க பங்கேற்றிருக்க வேண்டும். கூட்டத்தில் பங்கேற்காமல் அறிக்கை கொடுத்துள்ளனர். இது ஆளுநரை திருப்திப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை



யாகத்தான் பார்க்க முடிகிறது” என்கிறார்.

“இருமொழிக் கொள்கை, இந்தித் திணிப்பாக இருக்கட்டும், தமிழ்நாட்டில் பெயர் மாற்றம் உள்பட சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை ஆளுநருக்கு அனுப்பியபோது எந்தக் கட்சியாக இருந்தாலும் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தனர். தற்போதைய ஆளுநர் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. தமிழ்நாட்டுக்கு நீட் தேர்வில் இருந்து விலக்கு பெறுவதுதான் அரசின் குறிக்கோள்” என்கிறார், மச்சர் மா.சுப்ரமணியன்.

# புதுடில்லி செல்லும் திட்டம் இல்லை

## தமிழக ஆளுநர் சொல்கிறார்

சென்னை. பெப். 08

நீட் தேர்வு விவகாரம் தொடர்பில் ஆராய புதுடில்லி போகும் திட்டம் ஏதும் இல்லை என தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி கூறியுள்ளார்.



முன்னதாக தவறாக தமிழக மாநில ஆளுநர் டில்லிக்கு பயணம் செய்ய உள்ளதாக செய்திகள் வெளியான நிலையில், இதை அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2021ஆம் ஆண்டு, செப்டம்பர் 13ஆம் திகதி தமிழகத்திற்கு நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்கக் கோரி, சட்டப்பேரவையில் தமிழக அரசு நிறைவேற்றிய மசோதாவை, சட்டப்பேரவை சபாநாயகரின் மறுபரிசீலனைக்காக திருப்பி அனுப்பியுள்ளார் மாநில ஆளுநர் ஆர்.என்.ரவி.

இதைத்தொடர்ந்து நேற்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், மீண்டும் சிறப்பு சட்டமன்ற கூட்டத்தை நடத்தி மீண்டும் சட்டவரைவு மசோதாவை தாக்கல் செய்ய உள்ளதாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் ஒருநாள் தாமரை மலர்ந்தே தீரும்

## பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை

சென்னை. பெப். 08

தமிழகத்தில் என்றாவது ஒரு நாள் தாமரை மலர்ந்தே தீரும் என்று பா.ஜ.க. மாநிலத் தலைவர் கே.அண்ணாமலை தெரிவித்துள்ளார்.



சென்னை வானகரத்தில் வேட்பாளர்களின் அறிமுகக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், அண்ணாமலை பங்கேற்று வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைத்து பேசியதாவது:

தமிழகத்தில் ஒரு போலியான அரசியலை கட்டமைத்து வைத்திருக்கிறார்கள். அதன் மூலம் மக்களை தொடர்ந்து ஏமாற்றி வருகிறார்கள். ஆனால், பாரதிய ஜனதா புதுவிதமான அரசியலை கையில் எடுத்துள்ளது. அதற்கு மக்களிடம் வரவேற்பு உள்ளது. 8 மாதத்தில் திமுக சம்பாதித்த கெட்ட பெயர், கடந்த 80 ஆண்டுகளில் எந்த அரசியல் கட்சியும் சம்பாதிக்கவில்லை. மக்கள் நமக்கு வாக்களிக்கத் தயாராக இருக்கிறார்கள். தமிழகத்தில் மிகப் பெரிய மாற்று சக்தி நாம்தான்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# கனரக வாகனங்களில் மண் அகழ்வதை பொலிஸார் கண்டுகொள்வதேயில்லை

*கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் ஜீவராசா*

கிளிநொச்சி, பெப். 08

சாராய கடத்தல்களை கண்டறிந்து தண்டனை கொடுக்கும் பொலிஸார் இரணைமடுவில் கனரக வாகன்களில் மண்ணகழ்வதை கண்டுகொள்வதில்லை என கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் ஜீவராசா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிளிநொச்சி மாவட்டத்துக்கு மிக முக்கியமான குளமாகவும், விவசாயக் குளமாகவும் காணப்படும் இரணைமடுக் குளத்தில் அதிகளவான மண் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. குறித்த மண் அகழ்வை தடுப்பதற்கு பொலிஸார் முனைப்பு காட்டுவதாக தெரியவில்லை. கனரக வாகனங்களைக் கொண்டு பல கியூப் மணல் வெளிமாவட்டங்களுக்கு ஏற்றி செல்லப்படுகின்றது. இதனை கட்டுப்படுத்தவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் இரணைமடுக் குளம் முழுமையாக அழிவடைந்துவிடும். இந்த மண் அகழ்வை கட்டுப்படுத்தாமை யானது குளத்தை அழிப்பதற்கான திட்டமாக இருக்குமோ என்று சந்தேகம் எழுகின்றது.

சாதாரணமாக சாராயம் கடத்தப்படுவது தொடர்பில் பொலிஸார் கைது நடவடிக்கைகளை மேற்கொண்டு சட்டத்தின் முன் நிறுத்துகின்றனர். ஆனால் இவ்வாறு பாரிய மண் கொள்ளை இடம்பெறும் நிலையில் அதனை கட்டுப்படுத்த தவறுகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தி, இராணுவத்தினர் ஊடாக முழுமையாக கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (அ)

# யாழ் போதனா வைத்தியசாலையில் தாதியர், வைத்தியர்கள் போராட்டம்

*சம்பள பிரச்னை உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து*

யாழ்ப்பாணம், பெப். 08

**யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் தாதியர்கள் மற்றும் வைத்தியர்கள் சம்பளப் பிரச்னை உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.**

தற்போது 3000 ரூபாவாக உள்ள விசேட கடமைக் கொடுப்பனவை 10000 ரூபாவாக உயர்த்துதல், ஆசிரியர் சேவை சம்பள உயர்வின் மூலம் தாதிய சேவைக்கு ஏற்பட்டுள்ள சம்பள முரண்பாட்டைத் தீர்த்தல், தொழில்வல்லுநர் பட்டதாரிகளுக்கு திருத்தியமைத்த சம்பள அளவுத்திட்டத்தை நிர்ணயத்துடன் தகுந்த பதவி வாய்ப்புக்களைக் கிடைக்கச் செய்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு, கிளினிக் சேவை, என்பனவற்றின் சேவைகளை பெற்றுக்கொள்வதில் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்தனர்.

இந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

# தலையில் வெட்டு காயங்களுடன் வவுனியாவில் குடும்பஸ்தர் மீட்பு!

வவுனியா, பெப். 08

செட்டிகுளம் பகுதியில் தலையில் வெட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சைக்காக வவுனியா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

வவுனியா, செட்டிகுளம், கங்கன்குளம் பகுதியில் நேற்று அதிகாலை குறித்த குடும்பஸ்தர் மீட்கப்பட்டு அம்புலன்ஸ் மூலம் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

செட்டிகுளம், கங்கன்குளம் பகுதியில் உள்ள தனது வீட்டில் இருந்து நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் சண்முகபுரம் நோக்கிச் சென்ற இளம் குடும்பஸ்தர் இரவாகியும் வீடு திரும்பவில்லை.

இந்நிலையில் அதிகாலை ஒரு மணியளவில் கங்கன்குளம் சந்திப் பகுதியில் தலையில் வெட்டுக்காயங்களுடன் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் குறித்த குடும்பஸ்தர் வீதியில் கிடப்பதாக அவரது மனைவிக்கு கிடைத்த தகவலையடுத்து அவர் அங்கு சென்றுள்ளார்.

இதன்போது அப்பகுதி மக்களின் துணையுடன் அம்புலன்ஸ் மூலம் குறித்த இளம் குடும்பஸ்தர் வவுனியா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

சுப்பிரமணியம் கண்ணன் (வயது 33) என்ற இளம் குடும்பஸ்தரே தலையில் வெட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டார்.

வவுனியா வைத்தியசாலையில் குறித்த நபர் சிகிச்சை பெற்று வரும் நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். (அ)

# எண்ணெய் கையிருப்பில் இருந்தால் மின் துண்டிப்பு இடம்பெறமாட்டாது

கொழும்பு, பெப். 08

எண்ணெய் கையிருப்பில் இருக்குமாயின் மின் துண்டிப்பு இடம்பெறமாட்டாது என மின்சார சபையின் பேச்சாளர் பிரதி பொதுமுகாமையாளர் அண்ட்ரு நவமணி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மின்சார உற்பத்திக்கான எரிபொருளை வழங்குவது தொடர்பில் எரிபொருள் கூட்டுத்தாபனத்தினால் விசேட கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

இதன்படி, மின் உற்பத்தி நிலையங்களுக்கு எதிர்வரும் வாரத்துக்குத் தேவையான எரிபொருளை வழங்குவது தொடர்பிலை தீர்மானிக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவித்தன.

இதற்கு முன்னர், எரிபொருள் கூட்டுத்தாபனத்தினால் மின் உற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. (அ)

# யாழ்.இராணுவத்தால் கர்ப்பிணித் தாய்மாருக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் பொருட்பொதிகள்

யாழ்ப்பாணம், பெப். 08

யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுஜீவ செனரத் யாப்பா அதிகாரியின் எண்ணக்கருவுக்கு அமைவாக யாழ்.மாவட்டத்தின் தெல்லிப்பளை பிரதேச செயலகத்தின் வசிக்கும் 50 கர்ப்பிணித் தாய்மார்களைத் தெரிவு செய்து அவர்களுக்கான போசணைப் பொருட்பொதிகளும் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வித் தேவைகளை பூர்த்தி செய்யும் முகமாக 50 மாணவ மாணவிகளுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கும் சமூகநல வேலைத்திட்டம் கடந்த 6 ஆம் திகதி காங்கேசன்துறை திஸ்ஸவிகாரையில் இடம்பெற்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆகமத் தலைவர்களும் கலந்து கொண்டு கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் மாணவ மாணவிகளுக்கான ஆசிர்வாத சொற்பொழிவுகளை வழங்கி அவர்களின் நலன்வேண்டி பிரார்த்தனை செய்யப்பட்டது.

மேலும் கர்ப்பிணித் தாய்மார்களின் நலனைக் கருத்திற்கொண்டு 4 ஆவது வைத்தியப் படையணியினரின் வைத்தியர்கள் மற்றும் ஏனைய வீரர்களின் ஒத்துழைப்புடன் மருத்துவ முகாம் மற்றும் வைத்திய ஆலோசனைகளும் தேவையான மாத்திரைகளும் வழங்கப்பட்டன.



இந்நிகழ்வில் படைப்பிரிவுகளின் தளபதிகள், பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் நிர்வாக அதிகாரிகள், இராணுவ உயரதிகாரிகள் மற்றும் மாணவர்கள், பிரதேசவாசிகள் உட்பட குறிப்பிட்ட அளவிலானோர் கலந்துகொண்டனர். (அ-03)

# உயர்தர பரீட்சைக்கு தோற்றும் வெலிக்கடை சிறைக் கைதிகள்!

கொழும்பு, பெப். 08

சிறைச்சாலையின் கைதிகள் இருவர் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலை கைதிகள் இருவரும் 43 மற்றும் 46 வயதுடையவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய மகசின் சிறைச்சாலையில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில் இவர்கள் பரீட்சைக்கு தோற்றுகின்றனர் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்தது. (அ)

# இந்திய மீனவர்கள் 21 பேருக்கும் 21ஆம் திகதிவரை விளக்கமறியல்

யாழ்ப்பாணம், பெப். 08

வடமராட்சி கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது வடமராட்சி மீனவர்களால் சிறைப்பிடிக்கப்பட்டு கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட இந்திய மீனவர்கள் 21 பேரின் விளக்கமறியல் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று நடைபெற்ற வழக்கு விசாரணையின்போது நீதிபதியால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

குறித்த மீனவர்களில் ஒருவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியிருந்த நிலையில் அவர் இயக்கச்சி கொரோனா சிகிச்சை மையத்தில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

குறித்த மீனவர்கள் 21 பேரிடமும் வாக்குமூலம் பெறுவதற்கான அனுமதியை யாழ்.சிறைச்சாலைகள் அத்தியட்சகருக்கு நீதிபதி வழங்கினார்.

அதேவேளை, இந்திய மீனவர்களிடம் இருந்து 100 கிலோ மீன்கள் கைப்பற்றப்பட்டிருந்த நிலையில் அவற்றை விற்பனை செய்து அதில் வரும் பணத்தை நீதிமன்றில் ஒப்படைக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

எதிர்வரும் 21ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு வரும்போது மீனவர்கள் 21 பேரையும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறும் உத்தரவிடப்பட்டது. (அ-03)

# பொது போக்குவரத்தின்போது தடுப்பூசி அட்டை கட்டாயம்!

## நடவடிக்கை மேற்கொள்கிறது அரசு



கொழும்பு, பெப். 08

**பொது போக்குவரத்தை பயன்படுத்தும்போது தடுப்பூசி அட்டையை கட்டாயமாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.**

கண்டியில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- சுகாதாரத் துறையிலிருந்து சுற்றறிக்கை அல்லது விழிப்புணர்வை மேற்கொண்டால், மூன்று தடுப்பூசிகளையும் பெற்றவர்கள் மட்டுமே பொது போக்குவரத்தில் பயணிக்க வேண்டும் என்ற வழிமுறையை நாம் கடைப்பிடிக்க நேரிடும். ஏனெனில் இது ஒரு தொற்றுநோய். அந்த நிலைமை தொடர்பான முடிவுகளை சுகாதார அமைச்சு எடுக்க வேண்டும். அதன்படி, இவர்கள்தான் பொதுப் போக்குவரத்தில் பயணிக்க வேண்டும் என்று அவர்கள் எமக்கு அறிவுறுத்தல் வழங்கினால், அந்த வழிமுறைக்கு ஏற்றாற்போல் மாறவேண்டி ஏற்படும். இது குறித்து எழுத்துபூர்வமாக எந்த அறிவிப்பையும் நாங்கள் அளிக்கவில்லை. ஆனால் நீங்கள் கூறுவது போல் சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டு எழுத்து மூலம் எமக்குத் அறிவிக்கப்படுமாயின், தனியார், அரச பஸ்கள் மற்றும் ரயிலுக்கு அறிவிக்கப்பட்டு தடுப்பூசி அட்டைகளை சரி பார்க்க அறிவுறுத்தலாம்-என்றார். (அ)

## பஸ் கட்டணம் உயராது!

கொழும்பு, பெப். 08

எரிபொருள் விலை அதிகரிப்பினும், பஸ் கட்டணத்தில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படமாட்டாது என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்- எரிபொருள் மற்றும் உதிரிப்பாகங்களின் விலைகளின் அடிப்படையில் விலை சூத்திரம் ஒன்று உள்ளது.

அதனடிப்படையில், பஸ் கட்டணங்களை குறைப்பதற்கான சந்தர்ப்பம் இருந்த போதிலும், கோவிட்-19 தொற்று காரணமாக பாதிக்கப்பட்டுள்ள பஸ் உரிமையாளர்களின் நலனை கருத்திற்கொண்டு அதனை நடைமுறைப்படுத்தவில்லை.

அதேநேரம், இறுதியாக இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, மீண்டும் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டாலும் தமது கட்டணங்களில் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது என சகல சங்கங்களின் பிரதிநிதிகளும் எமக்கு உறுதியளித்திருந்தனர்.

எனவே அதனடிப்படையில் பஸ் பயணக் கட்டணங்களில் எவ்வித திருத்தங்களும் மேற்கொள்ளப்படமாட்டாது-என்றார். (அ)

## ஹிஜாஸ் ஹிஸ்புல்லா பிணையில் விடுதலை



கொழும்பு, பெப். 08

பயங்கரவாதத்தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு பிணை வழங்கப்பட்டது.

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் இந்த பிணை உத்தரவு வழங்கப்பட்டது.

சிறுபான்மையின உரிமைகள் தொடர்பான சட்டத்தரணியும் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த பலரது சார்பில் ஆஜராகியவருமான ஹிஜாஸ் ஹிஸ்புல்லா கடந்த 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் திகதி குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டார்.

உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல் சூத்திரதாரிகளுக்கு உதவியமை மற்றும் இன, மத சமூகங்களுக்கு இடையில் அமைதியின்மையை குழப்பத்தையும் தோற்றுவிக்கக் கூடியவாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஹிஜாஸ் ஹிஸ்புல்லா விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டார்.

இன, மத சமூகங்களுக்கு இடையில் அமைதியின்மையைத் தோற்றுவித்ததாகக் கடந்த 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3 ஆம் திகதி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கொரோனா தடுப்பூசி போடாதோர் எவ்வாறு கண்காணிக்கப்படுவார்கள்?

### சுகதார அமைச்சு விளக்கம்

கொழும்பு, பெப். 08

இலங்கையில் கட்டாய தடுப்பூசி ஆணை ஏப்ரல் 30 -ஆம் திகதி நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பொது இடங்களுக்குச் செல்வோரின் தடுப்பூசி நிலையை பொலிஸார் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கண்காணிப்பார்கள் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

கோவிட் தடுப்பூசியின் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் பொது இடங்களுக்குச் செல்லவோ, சேவை பெற பொது இடங்களுக்குள் நுழையவோ தடை செய்யும் வகையில் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல வெளியிட்டார்.

இதன்படி மருத்துவக் காரணங்கள் உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட சில காரணங்களால் தடுப்பூசி போடுவதில் இருந்து விலக்கு அளிக்கப்படும் நபர்களைத் தவிர முழுமையாகத் தடுப்பூசி போடாத எவரும் பொது இடங்களில் நுழையவோ, சேவை பெறவோ அனுமதிக்கப்படமாட்டார்கள்.

பொது இடங்களில் நுழைய அவர்கள் தடுப்பூசி சான்றிதழை சமர்ப்பிக்கவேண்டும் எனவும் வர்த்தமானி கூறுகிறது.

"முழுமையான தடுப்பூசி" என்பது பொருத்தமான தடுப்பூசியின் தேவையான அளவுகளை சம்பந்தப்பட்ட நபர் பெற்றுள்ளார் என்பதைக் குறிப்பதாகும். இது சுகாதார அமைச்சால் தீர்மானிக்கப்படும் எனவும் வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொதுமக்களின் தடுப்பூசி நிலை குறித்து கண்காணிப்பது யார்? என சுகாதார அமைச்சின் வைத்திய தொழில்நுட்ப பணிப்பாளரும் கோவிட் 19 நடவடிக்கைகளுக்-கான இணைப்பாளருமான மருத்துவர் அன்வர் ஹம்தானியிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர், தடுப்பூசி நிலையைக் கண்காணிக்க பொலிஸாரின் உதவியும் பெறப்படும் எனக் கூறினார்.

எனினும் மக்கள் தடுப்பூசிகளை பெற்றிருக்கிறார்களா? என்பதைச் சரிபார்க்க எல்லா இடங்களிலும் பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்த முடியாது. பஸ் நிலையங்களில் உள்ளிட்ட சில பொது இடங்களில் பொலிஸார் இது குறித்து ஆய்வு செய்வர்.

வணிக வளாகங்கள் போன்ற இடங்களில், தங்கள் வளாகத்துக்குள் நுழைபவர்களின் தடுப்பூசி நிலை குறித்து அங்குள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆய்வு செய்யவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கு இது தொடர்பில் எதிர்காலத்தில் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் கூறினார்.

மருத்துவ காரணங்களுக்காக தடுப்பூசிகளை பெற முடியாதவர்கள் குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்று கேட்டபோது, அத்தகைய நபர்களுக்கு விசேட அங்கீகாரம் வழங்கப்படும் என்று மருத்துவர் ஹம்தானி கூறினார்.

மேலும், இந்தத் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படும் போது தடுப்பூசி அட்டைகளே ஆதாரமாகக் கருதப்படும். எதிர்காலத்தில் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட சான்றுகளை அறிமுகப்படுத்துவது குறித்தும் பரிசீலித்து வருவதாக அவர் குறிப்பிட்டார். எனினும் தொழில் நுட்ப செயல்முறை பின்பற்றப்பட வேண்டியிருப்பதால், இத்தகைய முறையை அறிமுகப்படுத்த இன்னும் சிறிது காலம் ஆகலாம் என்று அவர் சுட்டிக்காட்டினார். (அ)



## நுவரெலியாவில் கடும் பனி

கொழும்பு, பெப். 08

நுவரெலியாவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பனிப் பொழிவு அதிகமாக காணப்பட்டது. இந்த பனி பொழிவால் புற்தரைகளும் தேயிலைச் செடிகளும் உருளைக்கிழங்கு மற்றும் மரக்கறி செடிகளும் அதிகளவில் கருகி பாதிப்பு அடைந்தன.

அதே வேளை கடும் பனி பொழிவினால் கடும் குளிரும் நிலவியது.

விடியற்காலை குளிர் அதிகமாக காணப்பட்டதால் தொழில்களுக்கு செல்லும் தொழிலாளர்கள் தங்களது கடமைகளுக்கு செல்வதற்கும் சிரமம்பட்டதையும் காணமுடிந்தது.

நுவரெலியாவில் கடந்த டிசெம்பர் மாதம் முதல் இரவில் குளிராவும் பகலில் கடும் வெப்பமான காலநிலையும் நிலவுகின்றது.

அதேவேளை, நுவரெலியாவில் தற்போது வரட்சியான காலநிலை நிலவுவதால் வன பிரதேசங்களில் தீ வைப்புச் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. (அ)

## பள்ளமடு-விடத்தல்தீவு வீதியருகே இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு



மன்னார், பெப். 08

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பள்ளமடு-விடத்தல்தீவு பிரதான வீதிக்கு அருகில் நேற்று திங்கட்கிழமை காலை இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

சடலமாக மீட்கப்பட்டவர் சன்னார் கிராமத்தைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான கே.பாஸ்கரன் (வயது-33) என அடையாளம் காணப்பட்டார்.

குறித்த குடும்பஸ்தர் தனது வீட்டில் இருந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை புறப்பட்டு விடத்தல்தீவு கிராமத்துக்குச் சென்று விட்டு மீண்டும் தனது வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார்.

இந்த நிலையிலே அந்த குடும்பஸ்தர் நேற்று திங்கட்கிழமை காலை குறித்த பகுதியில் சடலமாக மீட்கப்பட்டார்.

சடலத்துக்கு அருகில் இருந்து அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு சென்ற அடம்பன் பொலிஸார் விபத்தா அல்லது கொலையா என்பது குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# முல்லைத்தீவில் இம்முறை நெல் விளைச்சல் படுவீழ்ச்சி

## பெரும்போக அறுவடை ஆரம்பம்

**முல்லைத்தீவு, பெப். 08**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது பெரும்போக நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இம்முறை விளைச்சல் பாரிய அளவில் வீழ்ச்சி அடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.**

கால போக பயிர்ச்செய்கைகளுக்குரிய இரசாயன உரமின்மை மற்றும் களைநாசினி, கிருமிநாசினி என்பவற்றின் விலையேற்றம் காரணமாக அவற்றைத் தாம் வாங்கி பயன் படுத்ந முடியாத நிலையில் இம்முறை தமது பெரும்போக நெற்செய்கை விளைச்சலில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

அத்துடன் தற்போது எரிபொருட்களின் விலை அதிகரிப்பால் அறுவடை இயந்திரக்கூலி முன்பை விடத் அதிகரித்துள்ளதாக விவசாயிகள் கூறினர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் விவசாயிகள் பலத்த இன்னல்களுக்கு மத்தியில் பிரதான வீதிகளை நெல் உலரவிடும் தளங்களாக பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)



# சுழிபுரம் காட்டுப்புலத்தில் நேற்று 35 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 08

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் காட்டுப்புலம் பகுதியில் கசிப்பு காய்ச்சிக் கொண்டிருந்த 32 வயதுடைய நபர் ஒருவர் 35 லீற்றர் கசிப்புடன் நேற்று கைது செய்யப்பட்டார்.

இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் வட்டுக்கோட்டை பொலிஸாரும் இராணுவ புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

வீட்டுக்கு பின்னால் உள்ள கோழிக்கூட்டுக்குள் கசிப்பு காய்ச்சும்போதே அவர் கைது செய்யப்பட்டார். இதன்போது கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்திய உபகரணங்களும் மீட்கப்பட்டன.

குறித்த சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-03)

# மன்னாரில் கா.பொ.த உயர்தர பரீட்சை மாணவர்கள் ஆர்வத்துடன் தோற்றினர்!

மன்னார், பெப். 08

கா.பொ.த உயர்தர பரீட்சை நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகிய நிலையில் மன்னார் மாவட்டத்தில் உயர் தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் நேற்று காலை ஆர் வத்துடன் பரீட்சை மண்டபங்களுக்கு சமூகமளித்தனர்.



மன்னார் மற் றும் மடு கல்வி வல யங்களில் உள்ள மாணவர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபங்களுக்கு சமூகமளித்தனர்.

நேற்றுக் காலை 9 மணிக்கு பரீட்சை ஆரம்பமாகியநிலையில் மாணவர்கள் நேரத்துடன் சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைவாக பரீட்சைக்கு தோற்றினர்.

இதேவேளை நாடளாவிய ரீதியில் உயர்தரப் பரீட்சைக்காக சுமார் 2 லட்சத்து 79 ஆயிரத்து 141 பாடசாலை பரீட்சார்த்திகளும் 66101 தனியார் பரீட்சார்த்திகளும் தோற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஹர்ஷன ராஜகருணாவுக்கு கொரோனா!

கொழும்பு, பெப். 08

ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜ கருணாவுக்கு கோவிட்-19 தொற்று உறுதியாகியுள்ளது.

இதனையடுத்து, அவர் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைய நாட்களாக பாராளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு கோவிட் தொற்று உறுதியாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எரிபொருள் விலைகளை உயர்த்தும் தீர்மனமில்லை

## உதய கம்மன்பில கூறுகிறார்

கொழும்பு, பெப். 08

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் எரிபொருள் விலையை அதிகரித்திருப்பினும், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கு இதுவரை எந்த தீர்மானமும் எடுக்கவில்லையென வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

எரிபொருள் விலை அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பில் இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை களஞ்சியப்படுத்தி வைத்துள்ளதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அது தொடர்பில் தற்போது ஆராயப்பட்டு வருவதாக வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில கூறினார். (அ)

# 18 சுகாதார தொழிற்சங்கங்கள் தொடர் பணிப்புறக்கணிப்பில்!

கொழும்பு, பெப். 08

தாதியர் உதவி வைத்திய சேவைகளுடன் இணைந்த 18 சுகாதார தொழிற்சங்கங்கள் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பை ஆரம்பித்துள்ளன.

சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று காலை 7 மணி முதல் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டின.

குறித்த வேலைநிறுத்தத்தில் புற்றுநோய் மருத்துவமனைகள், சிறுவர் மருத்துவமனைகள், மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் சிறுநீரக மருத்துவமனைகள் ஈடுபடாது எனவும் அவசர மற்றும் உயிர்காக்கும் சேவைகளில் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படாது எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# காரைநகரில் இந்திய படகுகள் நேற்று ஏலத்தில் விடப்பட்டன!

யாழ்ப்பாணம், பெப். 08

காரைநகரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்தியப் படகுகள் நேற்று ஏலத்தில் விற்பனை செய்யும் பணி கொழும்பில் இருந்து வந்த அதிகாரிகள் குழுவின் முன்னிலையில் இடம் பெற்றது.

இலங்கையின் 5 துறைமுகப் பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களுக்குச் சொந்தமான ட்ரோலர் படகுகள் நேற்று முதல் 5 தினங்களுக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

காரைநகரில் 135 இழுவைப் படகுகள் கட்டிவைக்கப்பட்டுள்ளன. இவை நேற்று ஏலம் விடப்பட்டன.

இதன்போது 68 பேர் ஆயிரம் ரூபா வீதம் செலுத்தி ஏலத்தில் பங்குகொண்டனர்.

உட்சபட்சமாக ஒர் படகு 13 லட்சம் ரூபாவாக சென்றபோதும் 50 இற்கும் மேற்பட்ட



படகுகள் 12 ஆயிரம் ரூபாவுக்கே ஏலமிடப்பட்டன.

இதனைவிட கிளிநொச்சியின் கிராஞ்சி மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளில் 35 படகுகள் கட்டிவைக்கப்பட்டுள்ளதாக நீரியல்வளத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

காரைநகர், காங்கேசன்துறையில் உள்ள படகுகள் ஏலம் விடப்பட்ட பின்னர் கிராஞ்சி, மன்னாரில் உள்ள படகுகளும் ஏலத்தில் விடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு விற்பனை செய் யப்படும் படகுகளை கடந்த ஒருவாரமாக 50 இற்கும் அதிகமனோர் பார்வையிட்டனர். (அ-03)

# சுற்றுலாப்பயணிகளுக்கு காப்புறுதி பெறுமதி 7,500 அமெரிக்க டொலர்களாக அதிகரிப்பு!

கொழும்பு, பெப். 08

வெளிநாடுகளிலிருந்து இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகள் கொரோனா காப்புறுதியை பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ள நிலையில், அது 7,500 அமெரிக்க டொலர்கள் வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் குறித்த காப்புறுதியானது 5,000 அமெ ரிக்க டொலர்களாக காணப்பட்டது.

நாட்டின் சுற்றுலா வலயத்திற்கு அருகில் பிரத்தியேகமானதொரு பொலிஸ் பிரிவு ஒன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், கல்கிசை மற்றும் உனவட்டுன பகுதியில் அதற்கான கட்டட நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த மாதத்தில் மாத்திரம் 82, 327 வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

**அன்று 13 ஐயும் மாகாணசபை முறைமையையும் இலங்கை - இந்திய உடன்படிக்கையையும் தீவிரமாக எதிர்த்த இன்னொரு முக்கியமான தரப்பு ஜே.வி.பி. இடையில் இணைந்த மாகாண சபையை உடைக்க வேண்டும் என்று அது உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து அதை உடைத்தும் விட்டது**




# 13 வேண்டுமா வேண்டாமா?

கருணாகரன்

**13** என்பதே பிரச்னைக்குரிய எண் என்பார்கள். அதை நிரூபிப்பதைப்போலவே அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தமும் உள்ளது. 1987இல் இலங்கை - இந்திய உடன்படிக்கையின் விளைவாக உருவாக்கப்பட்ட 13 ஐ ஏற்றுக் கொள்வதில் தொடங்கிய நெருக்கடியானது அதை நடைமுறைப்படுத்துவது வரையில் 35 ஆண்டுகளாகத் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

இப்பொழுது இந்தப் 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மோடிக்குத் தமிழ்த் தேசிய அடையாளத்தை வலியுறுத்தும் கட்சிகள் சில கடிதம் எழுதியிருக்கின்றன. இந்தக் கடிதத்தை எழுதுவதற்குப் பட்டபாடு கொஞ்சமல்ல. முதலில் மலையகக் கட்சிகளும் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சி களும் தமிழ்க்கட்சிகளோடு இணைந்து இதைப்பற்றிப் பேசின. இறுதியில் மலைய கக் கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும் விலகி விட்டன. 13 ஐ அப்படியே ஏற்றுக் கொள்வதில் இவர்களுக்குப் பிரச்சினை. அதனால் தமிழ்க்கட்சிகளில் ஒரு பகுதியினரே கையெழுத்திட்டு இந்தக் கடிதத்தை மோடிக்கு அனுப்பி வைத்தனர்.

இதேவேளை இந்தப் 13 தவறானது. இது தமிழர்களுடைய அரசியலுக்கும் உரிமைக்கும் வைக்கப்பட்ட சவப்பெட்டி - படு குழி- என்கின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். இதை எதிர்த்து அவருடைய கட்சியான அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் ஊர்திப் போராட்டமொன்றை ஆரம்பித்திருக்கிறது. இந்த ஊர்திகள் வவுனியாவிலிருந்து நெடுங்கேணி வழியாக முல்லைத்தீவுக்குச் சென்று கிளிநொச்சிக்குச் சென்று அங்கிருந்து யாழ்ப்பாணம் போயிருக்கின்றன. பின்பு யாழ்ப்பாணம் நல்லூரர்ப் பகுதியில் ஒரு கூட்டம் நடந்துள்ளது.

ஆனால், இந்தப் 13இன் விளைவான மாகாண சபைக்கான தேர்தலில் தாம் - தம்முடைய கட்சி - போட்டியிடுவோம் என்று கஜேந்திரகுமார் சொல்லியிருக்கிறார். இதற்கு அவர் ஒரு (சப்பைக் கட்டு) நியாயத்தையும் சொல்லியுள்ளார். அதாவது மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியடைந்த பின்பு "இந்த மாகாணசபையில் எந்த அதிகாரமும் இல்லை" என்று உலகத்துக்குப் பிரசித்தம் பண்ணப்போகிறாராம்.

இதைக் கேட்கும்போது உங்களுக்குச் சிரிப்பு வரலாம். கூடவே பலருக்கும் கோபமும் ஏற்படக் கூடும்.

ஏனென்றால், 1987இல் இந்த உடன்படிக்கை செய்யப்பட்டபோதே அதனைப் புலிகள் எதிர்த்தனர். அதற்குப் பிறகு மாகாணசபை முறையை நிராகரித்தும் இந்தியப் படைகளை எதிர்த்தும் விடுதலைப் புலிகள் 2009 வரை செயற்பட்டனர். அவர்கள் சொன்ன காரணம், "இந்த மாகாணசபையில் எதுவுமே இல்லை". இதற்காக அவர்கள் செலவிட்ட காலமும் இழந்த இழப்புகளும் கொஞ்சமல்ல. இறுதியில் தம்மையே முழுதாக விலை கொடுத்தனர்.

அதை விடவா கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 13 ஐயும் மாகாணசபையையும் அம்பலப்படுத்தப்போகிறார்?

புலிகளின் வழியில் தாமும் 13 ஐம் மாகாணசபையையும் நிராகரிப்பதாக இருந்தால் ஒரு வகையில் அது ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியது. புலிகளின் அரசியற் தொடர்ச்சியை காங்கிரஸ் கட்சியும் தொடர விரும்புகிறது என்று ஏற்றுக் கொள்ளலாம்.

ஆனால், அதை புலிகளைப் போல மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடாமல் செய்ய வேணும். அதுவே நியாயமானது. இது அப்படியல்ல. மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவும் வேணும். அதிகாரத்தில் இருக்கவும் வேணும். அது பயனற்றது என்று சொல்லவும் வேணும்.

இதைக் கேட்கும்போது சிரிப்பும் கோபமும் வராமல் என்ன செய்யும்?

பதவிக்கு - அதிகாரத்துக்கு வந்த பின் என்னவெல்லாம் நடக்கும் என்பது யாரும் அறியாத ரகசியமோ வித்தையோ அல்ல.

ஆக இது ஒரு "சுத்தமான பம்மாத்து" என்பதற்கு அப்பால் வேறொன்றுமேயில்லை. எப்படி அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியாக இருந்து கொண்டே தேர்தலில் வாக்கெடுப்பதற்கான தந்திரோபாயமாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி என்ற பெயரையும் மஞ்சள் - சிவப்பு வண்ணத்தையும் பயன்படுத்திக் கொள்கிறார்களோ அதைப் போலத்தான் இதுவும். சுத்த ஏமாற்று.

ஆனால் இதைப் புரிந்து கொள்ளாமலும் புரிந்து கொள்ள மறுத்தும் ஒரு தரப்பினர் கம்பு சுத்துவார்கள். இவர்களால்தான் தலைவர்கள் எப்போதும் தங்களை வளப்படுத்திக் கொள்வது.

மறுவளத்தில் - சிங்களத்தரப்பில் 13 அல்லது மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வோ தேவையில்லை என்று சொல்லி எதிர்க்கின்ற போக்குத் தீவிரமடைந்து கொண்டிருக்கிறது.

தொடக்கத்திலிருந்தே இந்தப் 13 சோதனைக்குட்பட்டே வந்திருக்கிறது. இலங்கை - இந்திய உடன்படிக்கையை அப்போதே (1987) ஐ.தே.கவின் ஒரு பகுதியினர் ஏற்றுக் கொள்ளவில்லை. குறிப்பாக இந்த உடன்படிக்கை செய்யப்பட்டபோது அதிகாரத்தில் இருந்த பிரதமர் ஆர்.பிரேமதாசவும் அவருக்கு நெருக்கமானவர்களும் இதைப் பகிரங்கமாகவே எதிர்த்தனர். இது தொடர்பாக அப்பொழுது நடந்த எந்த உத்தியோகபூர்வ நிகழ்ச்சிகளிலும் பிரேமதாசவும் அவருடைய அணியினரும் பங்குபற்றவில்லை.

அவர் ஜனாதிபதியாக வந்த பிறகு மாகாணசபையைச் செயலிழக்க வைக்கும் காரியங்களிலேயே மும்முரமாக ஈடுபட்டார். இதற்காக அவர் அன்று விடுதலைப்புலிகளையும் பயன்படுத்திக் கொண்டார். காரணம், விடுதலைப் புலிகளுக்கும் இந்தப் 13இலும் அதன் விளைவாக உருவாக்கப்பட்ட மாகாணசபை முறையிலும் விருப்பில்லை.

எனவே இதை வாய்ப்பாகக் கொண்டு புலிகள் - பிரேமதாச பேச்சுவார்த்தை நடைபெற்றபோது, அன்றிருந்த தமிழ்த் தரப்பின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பயன்படுத்தி பிரேமதாச மாகாணசபை முறைமையை வலுவிழக்கச் செய்ய முற்பட்டார்.

இதனால் உண்டான நெருக்கடிகளால் வடக்குக் கிழக்கு இணைந்த மாகாணசபையின் முதலமைச்ச ராக இருந்த வரதராஜப்பெருமாள், பிரேமதாச அரசாங்கத்தைக் கண் டித்து தமிழீழப் பிரகடனத்தைச் செய்து விட்டு வெளியேறினார். அப்படி அவர் வெளியேறுவதற் கான சூழலை பிரேமதாச அரசும் புலிகளும் இணைந்த அன்று உரு வாக்கியிருந்தனர்.

அன்று 13 ஐயும் மாகாணசபை முறைமையையும் இலங்கை - இந் திய உடன்படிக்கையையும் தீவிரமாக எதிர்த்த இன்னொரு முக்கியமான தரப்பு ஜே.வி.பி. இடையில் இணைந்த மாகாணசபையை உடைக்க வேண்டும் என்று அது உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து அதை உடைத்தும் விட்டது. இன்னும் அது மாகாண சபைக்கும் 13க்கும் இலங்கை - இந்திய உடன்படிக்கைக்கும் எதிராகவே நிற்கிறது.

சரி, மாகாணசபை முறைமை திருப்தியானதல்ல என்றால், பதிலாக எந்த வகையான ஏற்பாட்டை நீங்கள் முன்வைப்பீர்கள் என்றால், அதற்கு ஜே.வி.பியிடமும் சரியான பதில் இல்லை. ஏனைய சிங்களத் தரப்புகளிடத்திலும் உரிய விடையில்லை.

இருந்தாலும் 13 அவர்க ளுக்கு ஒரு தீராத பிரச்னை யாகவே தோன்றுகிறது. அரசாங்கத்துக்கும் 13இல் திருப்தியில்லை. முஸ்லிம் கட்சிகளுக்கும் வடக்குக் கிழக்கு இணைப்பு உட்பட 13இல் சுட்டப்படும் விட யங்கள் தொடர்பாக முழுமையான உடன்பாடில்லை.

இப்படியான குழப்பங்கள் நிறைந்த சூழலில்தான் 13 பற் றிய பேச்சுகள் தீவிரம் பெற்றுள்ளன. இப்பொழுது 13 நடைமுறைப்படுத்தப்படுமா? இல்லாதொழிக்கப்படுமா என்ற கேள்விகள் எழுகின்றன.

13 பற்றி இந்தியாவின் உறுதியான நிலைப்பாடு என்ன?

தமிழ்க் கட்சிகளில் சில மட்டும் 13 ஐ வலியுறுத்துவதால் ஏதாவது பயன் கிட்டுமா?

ஈ.பி.டி.பி உள்பட அரசாங்கத்தை ஆதரிக்கின்ற சில தரப்புகளும் 13 ஐ வரவேற்கின்றன. அப்படியென்றால் அது பலப்படுத்தப்படுமா? தனியே தமிழ்த் தரப்பின் ஆதரவுடன் வடக்குக் கிழக்கில் மட்டும் 13ம் மாகாண சபைக்கான அதிகாரப் பகிர்வும் நடக்குமா? அது சாத்தியமாகுமா? முஸ்லிம் கட்சிகள் மட்டுமல்ல, கிழக்கை மையப்படுத்தி இயங்கும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் உட்பட வேறு சில தரப்புகளும் வடக்குக் கிழக்கு இணைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. அப்படியென்றால் 13 இன் பெறுமதி என்ன? 13 ஐ வலியுறுத்தும் தமிழ்க்கட்சிகளின் கடிதத்துக்கு மதிப்பென்ன?

இப்படிச் சிக்கலானதொரு நிலையில் இலங்கை இந்திய உடன்படிக்கை, 13 ஆவது திருத்தம் - மாகாண சபை களின் அதிகாரம், வடக்குக் கிழக்கு இணைப்பு எல்லாம் எப்படியாகப் போகிறது?

இதற்குள் பழைய முறையிலா புதிய முறையிலா மாகாண சபைகளுக்கான தேர்தல் நடக்கும் என்ற வாதங்களும் நடந்து கொண்டிருக்கின்றன.

தேர்தலே நடக்குமா என்பது இன்னொரு கேள்வி.

எல்லாவற்றையும் விட 13 சோதனைக்குள்ளாகிறது. எல்லோரையும்13 சோதனை செய்கிறது. ஆனால் எல்லா எண்ணுக்கும் உரிய தனித்துவமும் சிறப்பும் 13 க்கும் உண்டு. இப்பொழுது அதுதான் (13) அதிவிசே சமாக இருக்கிறது. எல்லோரையும் ஆட்டிப்படைக்கிறது.

இதேவேளை இலங்கையின் மாகாண சபை முறைமையைப் பற்றி "இந்திய இலங்கை ஒப்பந்தம் - 13 ஆவது திருத்தமும் மாகாண அரசுகளும்" என்ற தலைப்பில் முன்னாள் வடக்குக் கிழக்கு மாகாண முதலமைச்சர் அ.வரதராஜப் பெருமாள் சிறப்பானதொரு விளக்கத்தை வுறவைநச ளுநஉந இல் கடந்த வாரம் அளித்துக்கொண்டிருந்தார்.

இன்று 13 ஆவது திருத்தம் பற்றியும் அதை நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியாவை வலியுறுத்துவது பற்றியுமான சிரத்தை அதிகரித்துள்ள சூழலில் வரதராஜப்பெருமாளின் விளக்கம் - தெளிவுபடுத்தல் முக்கியமானது.

**- அரங்கம்**



**ரஷ்யா அதன் அதிநவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில் அமெரிக்காவை விட ஒரு தசாப்தம் அல்லது அதற்கும் மேலாக பின்தங்கியிருக்கலாம், ஆனால், ரஷ்ய ஆயுதப்படைகள் தங்கள் படைப்பிரிவுகளில் ட்ரோன்களை ஒருங்கிணைக்கும் வகையில் முன்னோக்கி இருக்கலாம்.**

# போர்களை புதிய யுகத்துக்கு இட்டுச் செல்லும் “ட்ரோன்கள்”

## இராணுவங்களுக்கு பயங்கரமான ஒரு சவால்

ஆளில்லா ட்ரோன் விமானங்கள் ஒரு காலத்தில் வல்லரசுகளின் கைகளில் இருந்தன. ஆனால், அந்த நிலை தற்போது இல்லை. கிளர்ச்சியாளர்கள் மற்றும் சிறிய நாடுகளில் அதன் பயன்பாடு ஏற்கெனவே போரின் தன்மையை மாற்றுகிறது என எழுதுகிறார், பிபிசி முன்னாள் பாதுகாப்பு செய்தியாளர் ஜொனாதன் மார்கஸ்.

பெரும்பாலும் இராணுவ வரலாற்றில் ஒரு ஆயுத அமைப்பு ஒரு முழு யுத்த யுகத்தின் அடையாளமாக மாறும். மத்திய காலத்தில் அஜின்கோர்ட்டில் ஆங்கிலேய வில்லாளர்கள் பயன்படுத்திய நீளமான வில் அல்லது இரண்டாம் உலகப் போரின் தரைப் போரில் பயன்படுத்தப்பட்ட திறன்மிக்க கவசப் படைக்கலன்களை இதற்கு எடுத்துக் காட்டாக சொல்லலாம்.

MQ-1 பிரிடேட்டர் ஆளில்லா வான்வழி வாகனங்கள் (யுஏவி) ஆப்கானிஸ்தான், ஈராக் மற்றும் பிற இடங்களில் அமெரிக்கா நடத்திய கிளர்ச்சி-எதிர்ப்புப் போர் காலகட்டத்தின் ஆயுதச் சின்னமாக மாறின.

இது சோவியத் - அமெரிக்கப் பனிப் போர் காலம் முடிவடைந்த பின்னர், அமெரிக்கா தனித்து நின்று ஆதிக்கம் செலுத்தும் உலகளாவிய வல்லரசாக இருந்த போது, அது “ஒற்றை வல்லரசு” என அழைக்கப்பட்டது போல இருந்தது.

பிரிடேட்டர் வாகனங்கள், முதலில் வான்வழி உளவு நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட ஹெல்ஃபயர் ஏவுகணைகளுடன் ஆயுதம் ஏந்தியபோதுதான் ட்ரோன்கள் உயர்ந்த நிலையை அடைந்தன.

அதற்கு அடுத்து வந்த ரீப்பர் ட்ரோன்கள், குறிப்பாக வேட்டையாடும் கொலை ஆயுதமாக வடிவமைக்கப்பட்டன. இவை அதன் முன்னோடி ஆயுதங்களை விட அதிக வரம்பைக் கொண்டவை, அதிக எடையுள்ள வெடிமருந்துகளை அதில் எடுத்துச் செல்லக்கூடியவை. அதன் பெயரே அதன் நோக்கத்தை வெளிப்படையாகக் கோடிட்டுக் காட்டுகிறது.

வோஷிங்டனின் எதிரிகளை அவர்கள் எதிர்பார்க்கும் போதெல்லாம், எங்கு வேண்டுமானாலும் குறிவைக்கும் திறன் கொண்ட துல்லியமான கொலை ஆயுதங்களாக இவை இருக்க முடியும். ஜனவரி 2020 இல் பாக்தாத் விமான நிலையத்திற்கு வெளியே ஈரானிய ஜெனரல் காசிம் சுலைமானியைக் கொல்ல ரீப்பர் ட்ரோன் பயன்படுத்தப்பட்டதாக நம்பப்படுகிறது.

ஒரு குறுகிய காலத்திற்கு, பெரும்பாலும் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் (அதன் சொந்த குறிப்பிடத்தக்க ட்ரோன் தொழில்துறையுடன்) இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்தது. இதனை, ஆளில்லா ட்ரோன் விமானங்களின் ஆரம்ப காலகட்டம் எனலாம்.

ஆனால், நிலைமை இப்போது ஆச்சர்யப்படத்தக்க வகையில் மாறிவிட்டது.

ட்ரோன்களை அடிப்படையாக கொண்டுள்ள போர்முறையின் புதிய சகாப்தம் ஏற்கனவே இன்னும் பலரை உள்ளடக்கியதாக வந்துவிட்டது. யுஏவிக்களின் பயன்பாடு, பயங்கரவாத எதிர்ப்பு அல்லது கிளர்ச்சி-எதிர்ப்புப் போரில் இருந்து முழு அளவிலான வழக்கமான போராக மாறியுள்ளது. உண்மையில், ட்ரோன் அடிப்படையிலான போர்களின் புதிய மூன்றாம் தலைமுறை தொழில்நுட்பம் மிகவும் அதி நவீனமாகி, செயற்கை நுண்ணறிவுடன் இணைக்கப்பட்டுள்ளது.

லிபியாவின் ஆவேசமான உள்நாட்டுப் போரில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தனது கூட்டாளியான ஜெனரல் கலீஃபா ஹப்தாருக்கு சீனாவால் உருவாக்கப்பட்ட ட்ரோன்களை வழங்கியது.

ட்ரோன் தாக்குதல்கள் பெரும்பாலும் சிக்கலான சட்ட மற்றும் தார்மீக சங்கடங்களை எழுப்புகின்றன. ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தங்கள் மூலம் அவற்றின் பயன்பாடு ஏதேனும் ஒரு வகையில் கட்டுப்படுத்தப்படலாம் என்ற நம்பிக்கை மாயை என நிரூபிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா தனது முன்னணி தொழில்நுட்பத்தை அதன் நெருங்கிய நட்பு நாடுகளைத் தவிர வேறு எவருக்கும் ஏற்றுமதி செய்ய தயக்கம் காட்டினாலும், மற்றவர்கள் அத்தகைய வேறுபாட்டைக் காட்டவில்லை.

உண்மையில் யுஏவிக்களின் பரவல் இடைவிடாமல் தெரிகிறது.

100-க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் அரசு சாரா குழுக்களிடம் ட்ரோன்கள் உள்ளன. நியூ அமெரிக்கன் செக்யூரிட்டிக்கான மையத்தின் ஆய்வு இயக்குனர் பால் ஷார்ரே கூறுவது போல், இதன் பெருக்கம் தொடரும் என்று தெரிகிறது.

“சீனா, உலகளவில் ஆயுதம் ஏந்திய ஆளில்லா விமானங்களின் ஏற்றுமதியில் முன்னணியில் உள்ளது. ஆனால் ட்ரோன்கள் முன்னணி ராணுவ சக்திகளால் மட்டுமே பயன்படுத்தத்தக்கவை அல்ல.

ஈரான் மற்றும் துருக்கி போன்ற இடைநிலை சக்திகள் ட்ரோன் தொழில்நுட்பத்தை பயன்படுத்துகின்றன மற்றும் வெளிநாடுகளில் அவற்றை விற்பனை செய்கின்றன.”

“வணிக ட்ரோன் தொழில்நுட்பம் மிகவும் பரவலாகக் கிடைக்கிறது, சில நூறு டாலர்களுக்கு தாக்கவல்ல ட்ரோனை எவரும் உருவாக்க முடியும், மேலும் சில பயங்கரவாத குழுக்களிடமும் அவை உள்ளன” என அவர் வாதிடுகிறார்.

யுஏவியின் தீர்க்கமான தாக்கம் ஆச்சரியமல்ல என, அவர் மேலும் கூறுகிறார். ஒரு நாட்டுக்கு அவை மலிவான விலையில் கிடைக்கின்றன.

“போர் விமானங்களை வாங்க முடியாத அரசுகள் மற்றும் அரசு சாரா குழுக்கள் ட்ரோன்களை வாங்கலாம், மேலும் ட்ரோன்கள் போர் விமானங்களைப் போல திறன் கொண்டவை அல்ல என்றாலும், அவை அரசு சாரா குழுக்களுக்கு கொஞ்சம் விமான சக்தியை வழங்குகின்றன. உயர்-வரையறை கண்காணிப்பு மற்றும் துல்லியமான தாக்குதலை செயல்படுத்தும் டிஜிட்டல் தொழில்நுட்பங்களுடன் இணைந்து, ட்ரோன்கள் தரைப்படைகளுக்கு மிகவும் ஆபத்தானவையாக உள்ளன.” என்றார்.

ஆனால், பிராந்திய மோதல்கள் மற்றும் உள்நாட்டுப் போர்களில் யுஏவிக்களின் பயன்பாடு எதிர்காலப் போரில் ட்ரோனின் மதிப்பிற்கு ஒரு சுட்டியை மட்டுமே வழங்குகிறது.

அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் கிளர்ச்சிக்கு எதிரான நடவடிக்கைகளில் கவனம் செலுத்திய நிலையில், ரஷ்யா தனது பரந்த போரில் ட்ரோன்களை இணைப்பதற்கான சோதனைக் களமாக சிரியாவில் அதன் ஈடுபாட்டைப் பயன்படுத்தியது.

“படைத்தளபதிகளிடம் முன்பு இல்லாத வகையில், படைகளுக்கு யுஏவி செயல்படுத்தப்பட்ட போர்க்களத்தின் 24 மணிநேர சூழலை வழங்குவதன் மூலம், இந்த கருத்து இப்போது ரஷ்ய ராணுவம் இன்றும் எதிர்காலத்திலும் எவ்வாறு சண்டையிடுகிறது என்பதை மறுவரையறை செய்கிறது” என்றார்.

ரஷ்ய மறுப்புகளுக்கு மத்தியிலும், உக்ரேனில் நடைபெறும் சண்டை, வழக்கமான ரஷ்ய பணியாளர்களை ஈடுபடுத்தியது, யுஏவிக்களை அதன் திட்டமிட்ட பயன்பாடு பற்றிய மதிப்பு மிக்க நுண்ணறிவை வழங்கியுள்ளது. கிழக்குஊக்ரேனில் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட பல வகையான ஆளில்லா விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன.

பெண்டெட் கூறுகையில், உளவு தகவல்கள் சேகரிப்பு மற்றும் உளவு பார்ப்பது அவற்றின் முக்கிய பணியாக உள்ளது, “ஆனால் மின்னணு போரில் அவற்றுக்கு மற்றொரு முக்கிய பங்கு உள்ளது, அந்த நோக்கத்திற்காக சிறப்பு வகை ரஷ்ய ட்ரோன்கள் பொருத்தப்பட்டுள்ளன” என்றார்.

மின்னணு போர்முறை என்பது எதிரிப் படைகளை அவர்கள் அனுப்பும் சிக்னல்கள் மூலம் கண்டுபிடித்து, பின்னர் அவர்களின் தகவல்தொடர்புகளை தடுப்பதன் மூலம் தனிமைப்படுத்தும் கலை.

ரஷ்யா அதன் அதிநவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில் அமெரிக்காவை விட ஒரு தசாப்தம் அல்லது அதற்கும் மேலாக பின்தங்கியிருக்கலாம், ஆனால், ரஷ்ய ஆயுதப்படைகள் தங்கள் படைப்பிரிவுகளில் ட்ரோன்களை ஒருங்கிணைக்கும் வகையில் முன்னோக்கி இருக்கலாம்.

ஆளில்லா இராணுவ விமானங்கள் முழு ரஷ்ய இராணுவப் படை கட்டமைப்பிலும் உள்ளன என, பெண்டெட் கூறுகிறார்.

“யுக்ரேனிய கவசப் பிரிவுகள் விரைவாக அடையாளம் காணப்பட்ட நிகழ்வுகளுடன் இந்த அமைப்பின் பயன்பாடு போரில் நிரூபிக்கப்பட்டுள்ளது; இதனால், அவர்களின் தகவல் தொடர்புகள் தடைபட்டன மற்றும் அவர்களுக்கு எதிராக பேரழிவுகரமான பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.” என்றார்.

உண்மையில் யுக்ரேனும் ஆயுதமேந்திய துருக்கிய ட்ரோன்களை பயன்படுத்தலாம். அந்நாடு, டான்பாஸ் சண்டையில் ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகளுக்கு எதிராக அவற்றைப் பயன்படுத்தியது.

அதிக தீவிரம் கொண்ட போர்க்களங்களுக்கு வெளியே, கிளர்ச்சியாளர்கள் மற்றும் போராளிப் பிரிவுகளால் ட்ரோன்கள் இன்னும் பயன்படுத்தப்படுகின்றன.

ஆனால் ட்ரோன் அச்சுறுத்தல் ஒப்பீட்டளவில் நன்கு புரிந்து கொள்ளப்பட்டால், அதை எதிர்கொள்வது ஏன் மிகவும் கடினம்?

“இன்று பயன்பாட்டில் உள்ள பெரும்பாலான ட்ரோன்கள், பாரம்பரிய இராணுவ விமானங்களை விட சிறியவை மற்றும் பல்வேறு வகையான வான் பாதுகாப்புகள் அவற்றுக்குத் தேவைப்படுகின்றன” என்று ஷார்ரே கூறுகிறார். “அவை மெதுவாக பறக்கின்றன மற்றும் தரையில் பறக்கின்றன, அதாவது, பல வான் பாதுகாப்பு அமைப்புகள் அவற்றை சுடுவதற்கு உகந்ததாக இல்லை.”

பல நாடுகள், ட்ரோன்களுக்கு எதிரான நடவடிக்கைகளை உருவாக்க செயலாற்றி வருகின்றன, மேலும் காலப் போக்கில் போர்க்களங்களுக்கு மிகவும் பயனுள்ள ட்ரோன் எதிர்ப்பு அமைப்புகள் பரவுவதைக் காண்போம் என்று அவர் கூறுகிறார். குறைந்த விலை ட்ரோன்களை அதிக எண்ணிக்கையில் உருவாக்க முடியும் என்பதால், அதிகளவிலான ட்ரோன் தாக்குதல்களை எதிர்கொள்வது ஒரு சவால்.

“ட்ரோன் திரள்கள்” என்று அழைக்கப்படும் எதிர்காலத்தைப் பற்றி நிறைய பேசப்படுகிறது.

13 ட்ரோன்களைப் பயன்படுத்தி ரஷ்ய விமான தளத்திற்கு எதிராக 2018 இல் சிரியாவின் கிளர்ச்சியாளர்கள் நடத்தியது போன்ற பெரிய அளவிலான ட்ரோன் தாக்குதல்களை நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். இருப்பினும், ட்ரோன்களின் பிரளயம் உண்மையான திரள் அல்ல என்று பால் ஷார்ரே வலியுறுத்துகிறார்.

“திரள் என்பது ஒரு தாக்குதலில் ட்ரோன்களின் எண்ணிக்கையால் வரையறுக்கப்படவில்லை, ஆனால் எந்த மனித ஈடுபாடும் இல்லாமல் ஒன்றாக இணைந்து செயல்படும் திறனால் வரையறுக்கப்படுகிறது” என அவர் வாதிடுகிறார்.


மனித பாதுகாவலர்களை திணற அடிக்கும் அளவுக்கு ஒரே நேரத்தில், பல திசை தாக்குதல்களுக்கு ட்ரோன் திரள்கள் பயன்படுத்தப்படலாம். காலப் போக்கில், இது போரை மாற்றுவதில் வியத்தகு விளைவை ஏற்படுத்தும் என்று அவர் எச்சரிக்கிறார். - பி.பி.சி.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

❖ 1,2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட உருவிற்கு ஒத்த உருவைத் தெரிவு செய்க.

01.





02.




❖ 3, 4 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து விடை தருக.

03.



உரு A உரு B

A,B ஆகிய இரு உருக்களுக்குமிடையே எத்தனை வேறுபாடுகள் உள்ளன?

1) 5 2) 4 3) 3




உரு C உரு D


04. C,D ஆகிய இரு உருக்களுக்குமிடையே உள்ள வேறுபாடுகளின் எண்ணிக்கை எத்தனை?

1) 4 2) 3 3) 2

05. கீழே தரப்பட்டுள்ள கோலம் தொடர்ந்து செல்லும் போது 5ஆம் இடத்தில் வரத்தக்க உருவைத் தெரிவு செய்க.




01. 02. 03. 04. 05.



1) 2) 3)


❖ பழங்களின் விலைகளை அவதானித்து விடை எழுதுக.





07. மூன்று பழங்களிலும் ஒவ்வொன்று வாங்கத் தேவையான பணம் எவ்வளவு?

1) ரூபாய் 42.00 2) ரூபாய் 47.00 3) ரூபாய் 41.00

08. பின்வரும் குறியீடுகளிற்குரிய பெறுமானங்களை அவதானித்து வெற்றிடத்திற்குப் பொருத்தமான குறியீடு இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க?




09. ஆங்கில எழுத்துக்களும் அவற்றின் பெறுமானங்களும் தரப்பட்டுள்ளன. அதனை அவதானித்து ரூ. 5481 என்பது குறிக்கும் சரியான ஆங்கில எழுத்து வடிவத்தைத் தெரிவு செய்க.

| | |
|---|---|
| R. ADEH ⟶ | ரூ. 6158 |
| R. GBFD ⟶ | ரூ. 7421 |
| R. AFHE ⟶ | ரூ. 6285 |

1) R. EBHC 2) R. EBFD 3) R. EBHD

10. மாலாவிற்கு 8 வயதாக இருக்கும்போது அவளது அப்பாவின் வயது 32 ஆகும். மாலாவின் வயது இரு மடங்கான போது அவளது அப்பாவின் வயது யாது?

1) 64 2) 40 3) 16

## விடைகள்

1. 2
2. 3
3. 3
4. 1
5. 1
6. 2
7. 2
8. 3
9. 3
10. 2

## கல்வி tv CHANNEL-1

08.02.2022
செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | கணிதம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | கணிதம் |

## கல்வி tv CHANNEL - 2

08.02.2022
செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கணிதம் |
| 09.00 | தரம்-02 | தமிழ் |
| 09.45 | தரம்-03 | கணிதம் |
| 10.30 | தரம்-03 | English |
| 11.15 | தரம்-04 | கணிதம் |
| 12.30 | தரம்-04 | English |
| 01.15 | தரம்-05 | கணிதம் |
| 02.00 | தரம்-05 | English |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | தமிழ் |
| 06.00 | தரம்-03 | கணிதம் |
| 06.45 | தரம்-03 | English |
| 07.30 | தரம்-04 | கணிதம் |
| 08.15 | தரம்-04 | English |
| 09.00 | தரம்-05 | கணிதம் |
| 09.45 | தரம்-05 | English |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கணிதம் |
| 12.30 | தரம்-03 | English |
| 01.15 | தரம்-04 | கணிதம் |
| 02.00 | தரம்-04 | English |
| 02.45 | தரம்-05 | கணிதம் |
| 03.30 | தரம்-05 | English |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கோட்டாபயவை ஆதாரிக்காத போதிலும் அரசியல் கைதிகளை விடுவித்தது அவரே!

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

பட்டிப்பளை, பெப். 08
தமிழர்கள் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குகளை மைத்திரிபால சிறிசேனவுக்கு அளித்து ஜனாதிபதியாக்கினர். ஆனாலும் ஓர் அரசியல் கைதியைக் கூட விடுதலை செய்யமுடியவில்லை. ஆனால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 38ஆயிரம் வாக்குகள் மட்டுமே அளிக்கப்பட்டன. அவரே 16 தமிழ் அரசியல் கைதிகளை பொது மன்னிப்பில் விடுதலைசெய்தார் என்று இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் மத்தியில் 72வருடங்களாக ஏமாற்று அரசியல் செய்தவர்களால் தமிழ் மக்களின் உரிமை சார்ந்த அரசியலும் அபிவிருத்தி சார்ந்த அரசியலும் இன்று கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

பட்டிப்பளை - அம்பிலாந்துறை பகுதிக்கு குடிதண்ணீர் விநியோக திட்டம் நேற்று முன்தினம் மாலை ஆரம்பித்து வைத்த போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தத் திட்டத்தின் மூலம் மூன்று கிராம சேவகர் பிரிவுகளை சேர்ந்த மக்கள் நன்மை பெறவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



## திருமலையில் சடலம் மீட்பு!

குச்சவெளி, பெப். 08
திருகோணமலை திரியாய் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டதாக குச்சவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் தொடர்பில் பொது மக்கள் குச்சவெளி பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். இதையடுத்தே சடலம் மீட்கப்பட்டது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் களுத்துறை - உக்வத்தை, விஜிதமாவத்தையை சேர்ந்த சனத் எதிக்சூரிய (வயது 39) என ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது கொலையா அல்லது இயற்கை மரணமா என குச்சவெளி பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## எரிபொருள் விலைகளை உயர்த்தும் தீர்மானமில்லை

### உதய கம்மன்பில கூறுகிறார்

கொழும்பு, பெப். 08
லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் எரிபொருள் விலையை அதிகரித்திருப்பினும், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கு இதுவரை எந்த தீர்மானமும் எடுக்கவில்லை யென வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

எரிபொருள் விலை அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பில் இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை களஞ்சியப்படுத்தி வைத்துள்ளதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.



அது தொடர்பில் தற்போது ஆராயப்பட்டு வருவதாக வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில கூறினார். (அ)

## கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலர்கள் பதவிகளை பொறுப்பேற்பு

திருகோணமலை, பெப். 08
கிழக்கு மாகாண அமைச்சுக்களின் புதிய செயலாளர்கள் நேற்று தங்களின் கடமைகளைப் பொறுப்பேற்றனர்.

கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களுக்கான இடமாற்றக் கடிதங்களை கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கடந்த முதலாம் திகதி வழங்கி வைத்தார்.

இதற்கமைவாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக திருமதி ஜே. ஜே. முரளிதரன், முதலமைச்சரின் செயலாளராக திருமதி பீ. கலாமதி, கல்வி அமைச்சின் செயலாளர் எச். ஈ. எம். டபிள்யூ. ஜீ. திஸநாயக்க, பிரதி பிரதம செயலாளராக (ஆளணி மற்றும் பயிற்சி) திருமதி ஆர். யூ. ஜலீல், பிரதி பிரதம செயலாளராக (நிர்வாகம்) எம். எம். மன்சூர் ஆகியோர் நேற்றைய தினம் தமது பதவிகளைப் பொறுப்பேற்றனர். (ஐ)



## இரு எரிவாயு அடுப்புக்கள் மட்டக்களப்பில் வெடிப்பு

மட்டக்களப்பு, பெப். 08
மட்டக்களப்பில் நேற்று முன்தினம் இரு எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பங்கள் பதிவாகின.

மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட மட்டிக்கழி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் எரிவாயு அடுப்பு ஒன்று வெடித்தது.

மட்டிக்கழி பிரதான வீதியில் உள்ள வீடு ஒன்றிலேயே இந்த வெடிப்பு சம்பவம் பதிவாகியுள்ளது. காலை உணவு தயாரித்த போதே முன்னெடுக்கப்படும்போது அடுப்பு வெடித்து சிதறியதாக குறித்த வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று முன்தினம் வாழைச்சேனை பகுதியிலும் எரி வாயு அடுப்பு ஒன்று வெடித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கடந்த 5 வருடகால அழிவுகளுக்கு ரணில், சஜித், அநுரவே பொறுப்பு

### மஹிந்தானந்த சொல்கிறார்

கொழும்பு, பெப். 08
கடந்த ஐந்து வருடங்களில் செய்யப்பட்ட அழிவுகளுக்கு அநுர, ரணில், சஜித் ஆகியோர் பொறுப்பேற்க வேண்டும் என்று தெரிவித்த விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, அரசியல் வரலாற்றில் மிகவும் தோல்வியடைந்த அரசியல்வாதி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ என்றும் தெரிவித்தார்.

நாவலப்பிட்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார். அங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர்,

கொரோனா வரும் போது ரணிலும் மைத்திரியும் இருந்தால் என்ன? என்று கேட்கின்றனர் அவர்கள் இருந்திருந்தால் கடவுள் தான் காப்பாற்றியிருக்க வேண்டும்.

ரணிலுக்கும் மைத்திரிக்கும் இடையிலான சண்டையில் இறந்தவர்களை வீதியில் தான் புதைத்திருக்க வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கவால் பாராளுமன்றத்தில் சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைமையும், அநுரவுக்கு எதிர்க்கட்சியின் பிரதம கொறடா பதவியும் வழங்கப்பட்டன என்றும் தெரிவித்தார்.

அவர்களுக்கு 4 எம்.பி.க்கள் இருந்ததாகவும் தங்களிடம் 58 பேர் இருந்த போதும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்க்கட்சித் தலைமைப் பதவி வழங்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டார். (ஐ)

## அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தி அதிகாரத்தை கைப்பற்ற சு. க. சதி!

### இராஜாங்க அமைச்சர் செஹான்

கொழும்பு, பெப். 08
சுதந்திர கட்சியினர் அரசாங்கத்தை பலவீனப்படுத்தி அதனூடாக ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் நிலைப்பாட்டில் செயற்படுகிறார்கள் என நுண்கடன் மற்றும் சுயதொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரம் பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

மேலும், அரசாங்கத்தை பலப்படுத்தும் நோக்கம் சிறீலங்கா சுதந்திர கட்சிக்கு கிடையாது. அரசாங்கத்தை பலவீனப்படுத்தி அதனூடாக ஆட்சிய திகாரத்தை கைப்பற்றும் நோக்கில் செயல்படுகிறார்கள். சுதந்திர கட்சியின் தலைவர் உட்பட சுதந்திர கட்சி உறுப்பினர்களின் அரசியல் செயற்பாடு குறித்து எந்நிலையிலும் அவதானத்துடன் உள்ளோம்.

2025ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் சிறீலங்கா பொதுஜன பெரமுனவே வெற்றிபெறும். கடந்த இரண்டு வருடகாலத்தில் பல்வேறு சவால்களை எதிர்க்கொள்ள நேரிட்டுள்ளது. நாட்டு மக்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்த முன்னுரிமை வழங்கியதால் சுபீட்சமான எதிர்கால கொள்கை திட்டத்தை செயல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது.

நாட்டின் மொத்த சனத்தொகையில் 85 சதவீதத்திற்கும் அதிகமானோர் கோவிட் -19 தடுப்பூசியில் இரண்டு டோஸ்களையும் பெற்றுக் கொண்டுள்ள தால் நாட்டின் அபிவிருத்தி பணிகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சுபீட்சமான எதிர்கால கொள்கை திட்டத்தின் அம்சங்கள் 2024 ஆம் ஆண்டுக்குள் அதாவது ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் முழுமைப்படுத்தப்படும்.நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவோம் - என்றார். (ஐ)

## போதைப்பொருள் விற்றவர் காத்தான்குடியில் கைது!

காத்தான்குடி, பெப். 08
காத்தான்குடியில் போதைப் பொருள் வியாபாரி ஒருவரை ஐந்தரைக் கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் நேற்று கைது செய்தனரென பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து நேற்று பொலிஸார் காத்தான்குடி மீன்பிடி இலாக வீதியில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தபோதே குறித்த நபரை மடக்கி பிடித்து கைது செய்தனர். கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# கிரிப்டோகரன்சி திருட்டு மூலம் ஏவுகணை சோதனைக்கு பணம் திரட்டிய வடகொரியா

## ஐ.நா. குற்றச்சாட்டு

நியூயோர்க், பெப். 08

சைபர் தாக்குதல்கள் மூலம் பல மில்லியன் டொலர்களுக்கும் அதிகமான கிரிப்டோகரன்சியை திருடி, தனது ஏவுகணை திட்டத்துக்கு அதனை வட கொரியா பயன்படுத்தியதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

கிரிப்டோகரன்சி என்பது ஒரு நாணயத்தின் டிஜிற்றல் வடிவமாகும். எந்த சட்டவிதிகளும் இல்லாமல் இணைய வழி ஊடாக இதன் மூலம் வர்த்தகம் செய்யப்படுகிறது. இதை அரசோ, ஒழுங்குமுறை அதிகார அமைப்போ வழங்குவதில்லை. இவ்வாறான டிஜிற்றல் பரிமாற்றம் காரணமாக இணைய மோசடிகள் நடப்பதற்கான வாய்ப்பு உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த மோசடி வெளியாகியுள்ளது.

2020 முதல் 2021ஆம் ஆண்டு நடுப் பகுதி வரையான காலத்தில் மட்டும் இவ்வாறு 50 மில்லியன் டொலருக்கு அதிகமான டிஜிற்றல் சொத்துக்கள் திருடப்பட்டதாக புலனாய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

வட கொரியாவின் அணு மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணைத் திட்டத்திற்கு முக்கியமான வருவாய் ஆதாரமாக இவ்வாறு திருடப்பட்ட பணம் இருந்ததாக புலனாய்வுத் தகவல்களை மேற்கோள்காட்டி ஐ.நா. கூறியுள்ளது.

ஐ.நா.வின் தடைகள் கண்காணிப்புக் குழுவிடம் இந்த விபரங்கள் ஒப்படைக் கப்பட்டுள்ளன.

வட அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசியாவில் குறைந்தது மூன்று கிரிப்டோகரன்சி பரிமாற்றங்களை குறி வைத்து இந்த சைபர் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

கடந்த மாதம் பாதுகாப்பு நிறுவன மான செயினாலிசிஸ் வெளியிட்ட ஆய்வில், வட கொரிய சைபர் தாக்கு தல்கள் மூலம் கடந்த ஆண்டு 400 மில்லியன் டொலர் மதிப்புள்ள டிஜிட்டல் சொத்துக்களை ஈட்டியிருக்கலாம் என்று தெரிவித்தது.

மேலும் 2019 ஆம் ஆண்டில், அதி நவீன சைபர் தாக்குதல்களைப் பயன்படுத்தி வட கொரியா தனது பேரழிவுத் திட்டங்களுக்காக 2 பில்லியன் டொலர்களை திரட்டியதாக ஐ.நா. கூறியது.

வடகொரியா அணு ஆயுத சோதனை நடத்தவும் ஏவுகணைகளை ஏவுவதற்கும் ஐ.நா. பாதுகாப்பு பேரவை தடை விதித்துள்ளது. எனினும் தடைகளை மீறி வட கொரியா தனது அணுசக்தி மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணை உள்கட்டமைப்பை தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது என்று ஐ.நா. அறிக்கை கூறுகிறது.

இதற்கிடையியே சீனாவும் ரஷ்யாவும் வட கொரியாவின் ஏவுகணைகளின் பரவலைக் கண்டிக்கும் அறிக்கையில் வெள்ளியன்று கையெழுத்திட மறுத்துவிட்டன.

வட கொரியாவுக்கான அதன் சிறப்புப் பிரதிநிதி இந்த வார இறுதியில் ஜப்பான் மற்றும் தென் கொரிய அதிகாரிகளைச் சந்தித்து நிலைமையைப் பற்றி விவாதிப்பார் என்று ஞாயிற்றுக் கிழமை அமெரிக்கா அறிவித்தது.

இதேவேளை, வடகொரியாவில் மனிதாபிமான நெருக்கடி தொடர்ந்து மோசமடைந்து வருவதாகவும் ஐ.நா. அறிக்கை கண்டறிந்துள்ளது. கொரோனா பெருந்தொற்றின்போது அதன் எல்லைகளை மூடியதன் விளைவாக இந்த நிலை ஏற்பட்டிருக்கக்கூடும் என கூறப்படுகிறது. (அ)



# இந்தோனேசியாவில் நடந்த பஸ் விபத்தில் 13 பேர் பலி!

## 34 பேர் காயம்

ஜகார்த்தா, பெப். 08

இந்தோனேசியாவின் யோககர்த்தா மாகாணத்தில் பயணிகள் பஸ் குன்று ஒன்றின் மீது மோதி இடம்பெற்ற விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர். மேலும் 34 பேர் காயமடைந்தனர்.

பந்துல் மாவட்டத்தில் உள்நாட்டு நேரப்படி நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

பஸ் ஒரு தாழ்வான வீதி வழியாகச் சென்றபோது கட்டுப்பாட்டை குன்று ஒன்றுடன் மோதி இந்த அசம்பாவிதம் இடம்பெற்றதாக இந்தோனேசிய தேசிய தேடல் மற்றும் மீட்பு அலுவலக செய்தித் தொடர்பாளர் யூசுப் லத்தீப் தெரிவித்துள்ளார்.

விபத்துக்குள்ளான பஸ்ஸில் மொத்தம் 50 வரையான பயணிகள் இருந்தனர். ஜாவா தீவின் தெற்கு கடற்கரையில் உள்ள பராங்ட்ரிடிஸ் சுற்றுலா தலத்துக்கு அவர்கள் சென்றுகொண்டிருந்தபோது விபத்து நிகழ்ந்தது. உயிரிழந்தவர்களில் பஸ் சாரதியும் அடங்குவதாக பந்துல் மாவட்ட பொலிஸ் தலைமை அதிகாரி இஹ்ஸான் தெரிவித்தார். (அ)

# இறைச்சி வற்றல்களில் பாவிக்கும் நைட்ரைட் உப்பினால் பெரும் தீங்கு

## காலப்போக்கில் அதைக் குறைக்க பிரான்ஸ் பாராளுமன்றம் தீர்மானம்



பரிஸ், பெப். 08

பிரான்ஸில்"உாயசஉரவநசநை"என்று சொல்லப் படும் பதப்படுத்தப்பட்ட இறைச்சி வற்றல் களுக்கு நீண்ட பாரம்பரியம் இருக்கிறது.

bacon, sausages உட்பட பல்வேறு விலங்கு இறைச் சித் தயாரிப்புகள் உப்புக் கலந்து பதப்படுத்தப் பட்டு நீண்டகாலம் பேணி வைத்து உணவாகப் பயன்படுத்தப் படுகின்றன.குழந்தைகளின் விருப்பத்துக்குரிய "ஜம்போன்" போன்றவையும் அவற்றில் அடங்கும். இறைச்சியைப் பதப்படுத்திய பின் அது நீண்ட நாள் கெடாமல் இருப்பதற்காகவும் அதன் சிவப்பு நிறத்தைப் பேணவும் நைட்ரைட் (nitrite) உப்பு கலக்கப்படு கிறது. இறைச்சி வற்றலுக்குப் பாவிக்க வேண்டிய அந்த உப்பின் அளவு ஐரோப்பிய மட்டத்தில் வரையறை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் நைட்ரைட் உப்புக் கலந்து இறைச் சியைப் புகையூட்டுதல் மற்றும் பதப்படுத்துதல் மூலம் உருவாகின்ற இரசாயனத் தாக்கம் மனித உடலில் புற்று நோய் போன்ற ஆபத்தான நோய்களுக் குக் காரணமாக இருக்கலாம் என்று உலக சுகாதார நிறுவனம் 2015 இல் எச்சரித்திருந்தது. அது தொடர்பான ஆராய்ச்சிகள் இன்னமும் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் ஆரோக்கியம் கருதி இறைச்சி வற்றல்களில் நைட்ரைட்டின் அளவைப் படிப்படியாகக் குறைக்கும் பிரேரணை ஒன்றைப் பிரான்ஸின் நாடாளு மன்றம் நிறைவேற்றியிருக்கிறது. அந்தத் தீர்மானம் உப்பின் பயன்பாட்டை உடனடியாகத் தடை செய்யாது.

அதற்கு முன்பாக நைட்ரைட்டின் தீங்குகள் பற்றி நாட்டின் உணவு சுகாதாரப்பாதுகாப்பு முகவரகம் வரும் ஜூன் மாத இறுதியில் அறிக்கை ஒன்றை வெளியிடும். அதன் அடிப்படையில் உப்பின் பாவனையைக் குறைக் கின்ற ஒரு கால அட்டவணையை அரசு பின்னர் தயாரிக்கும்.

பிரான்ஸில் தற்சமயம் 90 வீதமான இறைச்சி வற்றல் களில் நைட்ரைட் உப்பு கலக்கப்படுகிறது.அவற்றைத் தயாரிக்கின்ற தொழில் துறையினரது சம்மேளனம், அறிவியலின் அடிப்படையில் அரசு எடுக்கின்ற எந்தத் தீர்மானத்தையும் தாங்கள் வரவேற்பதாகத் தெரிவித் திருக்கிறது.

ஒரு கிலோ இறைச்சிக்கு 150 மில்லிக்கிராம் என்ற ஐரோப்பிய வரையறைக்கும் குறைவாகக் கிலோவுக்கு 110 மில்லிகிராம் உப்பையே தாங்கள் பயன்படுத்துவதா கவும் சம்மேளனம் தெரிவித்துள்ளது. (அ)

# கட்டாய தடுப்பூசிக்கெதிரான போராட்டம்: கனேடியத் தலைநகரில் அவசரகால நிலை!

ஒட்டாவா, பெப். 08

கட்டாய கொவிட் தடுப்பூசி உள்ளிட்ட கொவிட் கட்டுப்பாடு களுக்கு எதிராக ஒரு வாரத்துக்கும் மேலாக நீடிக்கும் லொறி சாரதிக ளின் போராட்டங்களுக்கு பதிலளிக் கும் விதமாக கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கனரக வாகன சாரதிகள் கட்டா யம் தடுப்பூசி செலுத்தியிருக்கவேண் டும் என்ற விதிமுறையை எதிர்த்து, சுதந்திர வாகன அணிவகுப்பு என்ற அமைப்பு கடந்த எட்டு நாட்களாக போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

போராட்டத்துக்கு பல்வேறு தரப் பினரும் ஆதரவு தெரிவித்து வருவதை யடுத்து, தற்போது 1000க்கு மேற் பட்ட கனரக வாகன சாரதிகள் வாகனங்களுடன் போராட்டதை நடத்தி வருகிறார்கள். ஐந்தாயிரத்துக் கும் மேற்பட்ட ஒட்டநர்கள் ஒட்டா வாவின் நகரை முற்றுகையிட்டுள்ள தால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைந்துள்ளது.

இந்தநிலையில், ஒட்டாவாவின் மேயர் ஜிம் வாட்சன் அவசரகால நிலையை அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்- நகரம் முற்றிலும் கட்டுப்பாட்டில் இல்லை. ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸாரை விட அதிகமாக உள்ள னர். போராட்டங்கள் குடியிருப்பா ளர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்த லாக உள்ளது. ஹோர்ன்கள் மற்றும் சைரன்களை ஒலிப்பதன் மூலமும், பட்டாசுகளை வெடித்து விருந்துகளாக மாற்றுவ தன் மூலமும் அவர்கள் அதி களவில் உணர்ச்சியின்றி நடந்து கொள் கின்றனர். இது தலைகீழாக மாற்றப் பட வேண்டும். நாங்கள் எங்கள் நகரத்தை திரும்பப் பெறவேண்டும்- என்றார். (அ)

# ஆப்கான் எல்லைக்குள் சூடு 5 பாகிஸ்தான் படையினர் பலி!

காபூல், பெப். 08

ஆப்கானிஸ்தான் எல்லைக்குள் இருந்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எல் லைப் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டி ருந்த பாகிஸ்தான் படையினர் 5 பேர் கொல் லப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் அரசு அறி வித்தது.

கடந்த ஒகஸ்டில் தலிபான்கள் ஆட்சிக்கு வந்ததிலிருந்து ஆப்கானிஸ்தான் எல்லைக் குள் இருந்தவாறு பாகிஸ்தான் படைகள் மீது நடத்தப்பட்ட இரண்டாவது தாக்குதலாக இது அமைந்துள்ளது.

சர்வதேச எல்லையைத் தாண்டி ஆப்கா னிஸ்தானுக்குள் இருந்து வந்த ஆயுததாரிகள் பாகிஸ்தான் ஆயுகுர்ரம் மாவட்டத்தில் எல்லையில் கடமையில் இருந்த பாகிஸ்தான் துருப்புகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய தாக என்று பாகிஸ்தான் இராணுவத்தின் ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாகிஸ்தானுக்கு எதிரான



நடவடிக்கைகளுக்கு ஆப்கானிஸ்தான் மண்ணை பயங்கரவாதிகள் பயன்படுத்து வதை கண்டிப்பதாக தலிபான்கள் தலைமை யிலான ஆப்கானிஸ்தான் இடைக்கால அரசாங் கம் தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் பாகிஸ்தானுக்கு எதிராக ஆப்கானிஸ்தானில் இருந்து முன்னெடுக்கப் படும் இதுபோன்ற செயல்களை அனும திக்க முடியாது என்றும் தலிபான் இடைக் கால அரசு கூறியுள்ளது. (அ)




## 1000ஆவது போட்டியில் இந்தியா அசத்தல் வெற்றி!

அகமதாபாத், பெப். 08

பந்துவீச்சிலும் துடுப்பாட்டத்திலும் மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வென்றது ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி.

முன்னணி வீரர்கள் சிலர் இல்லாத போதிலும் இந்தியா பங்கேற்ற ஆயிரமாவது ஒருநாள் போட்டியில் சிறப்பான வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

இந்தப் போட்டியில் 177 ஓட்டங்கள் என்ற எளிதான இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, 28 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 178 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. இதன்மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இந்தியா 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

தொடக்க ஆட்டக்காரரும், அணித் தலைவருமான ரோஹித் சர்மா 51 பந்துகளில் 60 ஓட்டங்களை விளாசினார். அவருடன் தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய இஷான் கிஷன் 36 பந்துகளில் 28 ஓட்டங்களை சேர்த்தார். விராட் கோலி 8 ஓட்டங்களிலேயே பெவிலியன் திரும்பினார். ரிஷப் பந்த் 11 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார்.

13ஆவது ஓவரிலிருந்து 18ஆவது ஓவருக்கு விராட் கோலி, இஷான் கிஷன், ரிஷப் பந்த் ஆகிய மூவரும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தாலும், பின்னர் ஜோடி சேர்ந்த சூர்யகுமார் யாதவ் - தீபக் ஹூடா இணை வலுவாகக் களத்தில் நின்றது. சூர்யகுமார் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களையும், தீபக் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

முன்னதாக, மேற்கிந்திய தீவுகள் தனது இன்னிங்ஸில் 43.5 ஓவர்களில் 176 ஓட்டங்கள் எடுத்த நிலையில், அனைத்து விக்கெட்களையும் இழந்து சுருண்டது. அந்த அணியில் அதிகபட்சமாக ஹோல்டர் 57 ஓட்டங்களும், அலென் 29 ஓட்டங்களும் சேர்த்தனர். ஏனையோர் சொற்ப ரன்களே எடுத்தனர்.

இந்தியாவின் பந்துவீச்சில், மிகச் சிறப்பாக பந்து வீசிய சாஹல் 4 விக்கெட்களையும், வாஷிங்டன் சுந்தர் 3 விக்கெட்களையும் கைப்பற்றினர். பிரசித் 2 விக்கெட்களையும், சிராஜ் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இந்திய சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்திய தீவுகள் அணி 3 ஒருநாள் போட்டிகள் மற்றும் 2 இருபது- 20 போட்டிகளில் விளையாடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் பழம்பெரும் பாடகர் லதா மங்கேஷ்கரின் மறைவையொட்டி, இந்திய கிரிக்கெட் வீரர்கள் இந்தப் போட்டியில் கறுப்பு பட்டி அணிந்து விளையாடியிருந்தனர். (ஐ)

### ஆபிரிக்க கிண்ண உதைபந்து:

## முதன்முறையாக சம்பியன் செனகல் அணியின் வசம்!

ஒலெம்பே, பெப். 08

7 தடவைகள் சம்பியனான எகிப்து அணியை வீழ்த்தி முதன் முறையாக ஆபிரிக்க வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது செனகல் அணி.

கமரூன் குடியரசின், ஒலெம்பே - பால் பியா மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆபிரிக்க கிண்ண இறுதிப் போட்டியில் எகிப்து - செனகல் அணிகள் மோதின.

போட்டி எந்தக் கோல்களும் அடிக்கப்படாமல் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி - தோல்வியை கணிக்க சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில், 4-2 என்ற கணக்கில் எகிப்தை வீழ்த்தி சம்பியனைக் கைப்பற்றியது செனகல் அணி.



செனகல் அணி ஆபிரிக்க நாடுகளின் கால்பந்தாட்ட கிண்ணத்தை கைப்பற்றுவது இதுவே முதன் முறையாகும்.

ஆட்டத்தின் ஆறாவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை தவறவிட்ட லிவர்பூல் நட்சத்திரம் சாடியோ மானே, போட்டியின் இறுதியில் கோல் அடித்து செனகலின் வெற்றியை உறுதி செய்தார். (ஐ)

## இங்கிலாந்து அணியின் பயிற்றுநராக கொலிங்வூட்!

லண்டன், பெப். 08



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்காக இங்கிலாந்து அணியின் தற்காலிக பயிற்றுவிப்பாளராக போல் கொலிங்வூட் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆஷஷ் தொடர் தோல்வியை அடுத்து இங்கிலாந்து அணியின் பயிற்றுவிப்பாளரான கிறிஸ் சில்வர்வூட் கடந்த வாரம் பதவி விலகினார். இதையடுத்தே முன்னாள் வீரர் கொலிங்வூட் பயிற்றுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் கொலிங்வூட் கூறுகையில், "கரீபியன் சுற்றுப் பயணத்துக்கான டெஸ்ட் அணியை வழிநடத்துவதில் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். நான் தொடங்குவதற்கு காத்திருக்க முடியாது", என்றார்.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் அணி இன்று செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்படவுள்ளது. இரு அணிகளிடையேயான 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் எதிர்வரும் மார்ச் 8ஆம் திகதி ஆரம்பமாகிறது. (ஐ)

## ஐ.சி.சி. மதிப்புமிக்க அணியில் இலங்கையின் வெல்லாலகே!

டுபாய், பெப். 08

2022 ஆம் ஆண்டின் 19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ணத்தின் மதிப்புமிக்க அணியில் இலங்கை அணியின் தலைவர் துனித் வெல்லாலகே இடம்பெற்றுள்ளார்.

இளையோருக்கான உலகக் கிண்ணத் தொடர் மேற்கிந்தியத் தீவுகளில் அண்மையில் நிறைவடைந்தது. இந்தத் தொடரில் இந்திய அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

இந்த நிலையில், ஐ. சி. சி. மதிப்புமிக்க வீரர்கள் அணியை வெளியிட்டது. 8 நாடுகளை சேர்ந்த 12 வீரர்கள் இடம்பெற்றுள்ள அந்த அணியின் விவரம் வருமாறு,

ஹசிபுல்லா கான் (பாகிஸ்தான்), ரீக் வில்லி (அவுஸ்திரேலியா), டெவால்ட் ப்ரீவிஸ் (தென்னாபிரிக்கா), யாஷ் துல் (இந்தியா), ரொம் பிரஸ்ட் (இங்கிலாந்து), துனித் வெல்லாலகே (இலங்கை), ராஜ் பவா (இந்தியா), விக்கி ஒஸ்ட்வால் (இந்தியா), ரிபோன் மொண்டோல் (பங்களாதேஷ்), அவாய்ஸ் அலி (பாகிஸ்தான்), ஜோஷ் பாய்டன் (இங்கிலாந்து), நூர் அகமது (ஆப்கானிஸ்தான்). (ஐ)




## சுதந்திர கிண்ண உதைபந்தாட்டம் வடக்கு, கிழக்கு அணிகள் வெற்றி!

பதுளை, பெப். 08

சுதந்திர கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

பதுளை வின்சன்ட் டயஸ் விளையாட்டரங்கில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மாகாணங்களுக்கு இடையில் நான்காம் கட்டப் போட்டிகள் நடந்தன.

இதில், மத்திய மாகாணத்துக்கும் வட மாகாணத்துக்கும் இடையில் பிற்பகல் நடைபெற்ற முதலாவது போட்டியில் வட மாகாணம் 1 - 0 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இரண்டு அணிகளும் சம அளவில் மோதிக்கொண்ட இந்தப் போட்டியின் 69ஆவது நிமிடத்தில் தேசிய வீரர் மரியதாஸ் நிதர்ஷன் போட்ட கோல் வட மாகாணத்தின் வெற்றி கோலாக அமைந்தது.

இந்த வெற்றியுடன் அணிகள் நிலையில் வட மாகாண அணி 10 புள்ளிகளுடன் முதலாம் இடத்தில் இருக்கின்றது. இதேவேளை, மந்தமான மின் வெளிச்சத்தில்இரவு நடைபெற்ற 2ஆவது போட்டியில் ஊவா மாகாண அணியை 1 - 0 என்ற கோல் வித்தியாசத்தில் கிழக்கு மாகாண அணி வெற்றி கொண்டது.

போட்டியின் ஆரம்ப கட்டத்திலேயே போடப்பட்ட கோல் கிழக்கு மாகாணத்தின் வெற்றி கோலாக அமைந்தது. போட்டியின் 19ஆவது நிமிடத்தில் லைனுஸ் கான் கோல் ஆக்கினார்.



அதன் பின்னர் இரண்டு அணிகளும் கோல் போடுவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகள் பலனளிக்காத நிலையில் கிழக்கு மாகாணம் 1 - 0 என்ற கோல் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ஐ)



# நுவரெலியாவுக்கு வருகைதரும் சுற்றுலா பயணிகள் அதிகரிப்பு

நுவரெலியா, பெப். 08

சுதந்திர தின விடுமுறையுடன் வந்த நீண்டவார விடுமுறையை அடுத்து, நுவரெலியாவுக்கு அதிகளவான சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர்.

நுவரெலியாவில் அமைந்துள்ள விக்டோரியா பூங்கா, கிரகறி பூங்கா, கிரகறி வாவிகரை உள்ளிட்ட சுற்றுலா தளங்களில் அதிகளவான சுற்றுலா பயணிகளை காணக்கூடியதாக இருந்தது.

இதன் காரணமாக நுவரெலியா நகரின் பிரதான வீதிகளில் வாகன நெறிசல் அதிகரித்து காணப்பட்டன.

சுற்றுலா பயணிகளின் வருகை காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்கள் அதிகரிக்கவில்லை என்றும் ஏனைய மாவட்டங்களை போன்றே நுவரெலியா மாவட்டத்திலும் வழமையான எண்ணிக்கையிலேயே தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (கே)

# எரிபொருள் விலை உயர்வு மீனவர்களையே பாதிக்கும்

## காவிந்த ஜயரத்ன எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 08

**எரிபொருள் விலையேற்றம் என்பது கடற்றொழிலாளர்களையே நேரடியாக பாதிக்கும் என்று, ஐக்கிய மக்கள் சக்தியில் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயரத்ன தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டு மக்கள் சொல்லொணா துயரங்களை எதிர்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அரசாங்கம் மனச்சாட்சியுடனானா செயற்படுகின்றது?

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு எனக்கு, நேற்று அழைப்பு விடுக்கப்பட்டது. ஊடகவியலாளர் சந்திப்பில் எதனைப் பேசலாம் என சிந்தித்துக் கொண்டிருந்தபோது எனது தொலைபேசிக்கு குறுந்தகவல் ஒன்று அனுப்பப்பட்டது. அந்த குறுந்தகவலில் தற்போது மகிழ்ச்சியா என்று வினவப்பட்டிருந்தது.

ஐ.ஓ.சியின் எரிபொருள் விலை அதிகரிப்பது என்பது மற்றைய நிறுவனங்களும் விலைகளை அதிகரிப்பதற்கான ஆரம்பமாகும். இந்த எரிபொருள் விலையேற்றமானது எனது பகுதியில் அமைந்துள்ள கடற்றொழிலாளர்களையே பெரிதும் பாதித்துள்ளது.

கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்படும்போது அது ஏனைய துறைசார்ந்தவர்களுக்கும் பாதிப்பாக அமையும்-என்றார். (அ)

# புதையல் தோண்டிய இருவர் கைதாகினர்!

கொழும்பு, பெப்.8

களுத்துறை தெபுவன பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிச்சர் பெலஸ்வத்த பிரதேசத்தில், புதையல் தோண்டும் செயல்பாட்டில் ஈடுபட்ட இருவரை பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

கிரிவத்துகுடுவை, ஹோமாகமை ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 52 வயதுடைய இருவரே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புதையல் தோண்டுவதற்கான பொருட்கள், சந்தேக நபர்கள் பயணித்த ஜீப் ரக வாகனம், மூன்று தொலைபேசிகள் என்பவற்றையும் பொலிஸார் இதன்போது கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்

இது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

# உயர்தர பரீட்சையில் ஆள்மாறாட்டமா? வாழ்நாள் தடை விதிப்பதற்கு தீர்மானம்

கொழும்பு, பெப். 08

பரீட்சை விதிமுறைகளை மீறும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, ஆள் மாறாட்டம் உள்ளிட்ட பரீட்சை விதிமுறைகளை மீறி செயற்படும் பரீட்சார்த்திகளுக்கு, பரீட்சை எழுதுவதற்கு வாழ்நாள் தடை விதிக்கப்படும் என பாடசாலை பரீட்சைகள் ஒழுங்கமைப்பு கிளையின், பிரதி பரீட்சைகள் ஆணையாளர் எம்.ஜீவராணி புனிதா தெரிவித்தார்.

அதேநேரம், பரீட்சை வினாத்தாள்களை சமூக வலைத்தளங்களில் வெளியிடுவதும் தடை செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, க.பொ.த உயர் தரப் பரீட்சை நேற்று முதல், எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம் திகதி வரை 2,437 பரீட்சை நிலையங்களில் இடம்பெறுகின்றது.

இந்த பரீட்சைக்கு 345,242 பரீட்சார்த்திகள் தோற்றுவதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

அவர்களில், 279, 141 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 66, 101 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் அடங்குகின்றனர். (அ)

## சட்ட விதிகளை மீறிய 1079 பேருக்கு எச்சரிக்கை!

கொழும்பு, பெப்.8

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய 1,079 பேர் எச்சரிக்கையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறுவோரை கண்காணிக்கும் செயல்பாடு தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் 663 பொலிஸார் இணைந்து நேற்றுமுன் தி னம் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது 2,853 மோட்டார் சைக்கிள்களும் 1,808 முச்சக்கர வண்டிகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், 6,446 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய 1,079 பேர் எச்ச ரிக்கையின் பின்னர் விடு விக்கப்பட்டனர். (கே)

# அனுமதியின்றி மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் கைது!

கொழும்பு, ஜன.8

நுவரெலியா, பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாஎலிய காட்டுப் பகுதியில், அனுமதிப்பத்திரமின்றி மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.

இரத்தினபுரி, பொகவந்தலாவை ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 50, 47 மற்றும் 32 வயதுகளையுடைய மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

# "மக்கள் வாழ்வதற்கு வசதி செய்" துண்டுபிரசுரம் விநியோகம்!

கொழும்பு, பெப் 8

மக்கள் வாழ்வதற்கு வசதி செய் என்ற தொனிப்பொருளில், துண்டுப் பிரசுரம் விநியோகிக்கும் நிகழ்வு, பதுளை, பசறை நகரில் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் துண்டுப் பிரசுரம் விநியோகிக்கும் செயல்பாடு முன்னெடுக்கப்பட்டது.

சங்கத்தின் உறுப்பினரும் ஹல்துமுல்லை பிரதேசசபை உறுப்பினருமான கிட்ணன் செல்வராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பசறை நகருக்கு வந்த மக்கள், வியாபார நிலையங்கள் என்பவற்றுக்கு துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

குறித்த துண்டுப் பிரசுரத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலையை குறை, எத்தகைய கழிவுகளுமின்றி ஆயிரம் ரூபாய் நாள்சம்பளத்தை தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்கு, மக்களின் உழைப்பை சுரண்டாதே போன்ற விடயங்களும் விரிவாக கக் குறிப்பிடப்பட்டுள்ளன. (கே)

# கிளிநொச்சி விசேட தேவைக்குட்பட்டோர் வலுவூட்டல் இணையத்துக்கு உதவியளிப்பு

கிளிநொச்சி, பெப். 08

கிளிநொச்சி விசேட தேவைக்குட்பட்ட சிறுவர்களின் வலுவூட்டல் இணையத்துக்கு முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனால் உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி திருவையாறில் அமைந்துள்ள விசேட தேவைக் குட்பட்ட சிறுவர்களின் வலுவூட்டல் இணையத்துக்கு முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் முயற்சியால் கிடைக்கப்பெற்ற ஒரு தொகுதி தொற்றுநீக்கி மருந்து பொருட்கள் நேற்று நிறுவனத்தின் நிர்வாகத் தினரிடம் கையளிக்கப்பட்டது. (அ)



# ஒன்றரை வயது குழந்தைக்கும் கொரோனா தொற்று உறுதி

கொழும்பு, பெப்.8

பதுளை, அப்புத்தளையில் ஒன்றரை வயது குழந்தைக்கு கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளதாக பதுளை மாவட்ட பொதுசுகாதாரப் பரிசோதகர் சங்க உபதலைவர் சுப்ரமணியம் சுதர்சன் தெரிவித்தார்.

பதுளை, அப்புத்தளையில் 28 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அனடிஜன் பரிசோதனையில், குறித்த குழந்தை உள்ளிட்ட 18 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த குழந்தை கொவிட் சிகிச்சை நிலையத்திற்கு தாயுடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த குழந்தை தவிர்ந்த ஏனைய 17 பேரும் அவர்களது வீடுகளில் தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (கே)

## தொற்றாளர்கள்...

தொடர்ந்து செய்து வருகின்றன.

கொரோனா நோயாளிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 70 படுக்கைகளில், தற்போது 59 படுக்கைகள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன.

தொற்று அதிகரிப்பு ஒரு நல்ல அறிகுறி அல்ல. தொற்று பரவுவதைத் தடுக்க அனைவரும் ஆதரவளிப்பது முக்கியம் - என்றார். (அ)

## பயங்கரவாத...

சந்தேகத்தின் பேரில் 3 பெண்கள் மற்றும் 5 ஆண்கள் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தில் தடுத்து வைக்கப் பட்டிருந்தனர்.

இதில் 9 ஆவது சந்தேக நபரான ஆனந்தராஜா என்பவர் கைது செய்யப் படாத நிலையில் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

குறித்த 8 பேருக்கும் ஆதரவாக சி. எச். ஆர். டி நிறுவனம் சட்ட உதவியை வழங்கியிருந்தது. இந்த நிறுவனத்தின் ஊடாக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கலும் செய்யப் பட்டிருந்தது.

இந்த நிலையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஆலோசனை சபைக்கு குறித்த விடயம் விசாரணைக்காக பாரப்படுத்தப்பட்டு விசாரணை நடத்தப்பட்ட நிலையில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இதன் பலனாக பயங்கரவாத தடைச் சட்டத்தின் 7:1 பிரிவின் பிரகாரம் சட்டமா அதிபரினால் பிணையில் விடுவிப்பதற்கான சம்மத கடிதம் நீதிமன்றத்திற்கு அனுப்பட்டிருந்தது.

இதனையடுத்து தடுத்து வைக்கப் பட்டவர்கள் சார்பில் வவுனியா நீதிமன்றத்தில் சட்டத்தரணி செ.கேதீஸ்வரன் ஆஜராகி குறித்த கடிதம் தொடர்பில் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதன் பிரகாரம் 8 பேரும் பதில் நீதிபதி க.தயாபரனால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (ஐ)

## இன்று...

(திருத்தம்) சட்டமூலத்தின் இரண் டாம் வாசிப்பு விவாதத்திற்கு எடுத்துக்கொள் ளப்படவுள்ளது.

குற்றவியல் நடைமுறைச் சட்டம் (திருத்தம்) வரைபு, தனி நபர் சுரங்கத் தடைச் சட்டம், நீதித்துறை (திருத்தம்) வரைபு, சிவில் நடைமுறைச் சட்டம் (திருத் தம்) மசோதா ஆகியவற்றின் இரண்டாம் வாசிப்பை மேற்படி நாட்களில் தொடரவும் முடிவு செய்யப்பட்டது.

2015 ஆம் ஆண்டின் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை அதிகார சபை சட்டம் இலக்கம் 5 மற்றும் மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம் (திருத்தம்) சட்டமூலத்தின் கீழ் இரண்டு ஒழுங்குமுறைகளின் இரண் டாம் வாசிப்பு இன்று முற்பகல் 11 மணி முதல் மாலை 4.30 மணி வரை விவாதத் திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

அரசாங்கத்தின் காரியங்களைத் தொடர்ந்து, ஒருங்கிணைத்தல் சட்ட மூலம் இரண்டாம் வாசிப்பின் பின்னர் சட்டவாக்க நிலைக்குழுவுக்கு மாற்றப் படவுள்ளது.

இதன்படி, இன்று முதல் வியாழக் கிழமை வரை, வாய்மொழி விடைக்கான வினாக்களுக்கு காலை 10 மணி முதல் 11 மணி வரை நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஒத்திவைப்பு நேரத்தில் கேள்விகளுக்கு மாலை 4.30 மணி முதல் 4.50 மணி வரை நேரம் ஒதுக்கப்பட்டுள் ளது. ஒத்திவைப்பு நேரத்தில் பிரேரணைக்கு மாலை 4.50 மணி முதல் 5.30 மணி வரை நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் மறைந்த மங்கள சமரவீரவுக்கு இரங்கல் அமர்வை வெள் ளிக்கிழமை ஒதுக்குவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் குழு தீர்மானித்ததாக செய லாளர் நாயகம் தெரிவித்தார். (ஐ)

## இந்தியாவை...

இதன்போது அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு,

“வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸின் புதுடில்லிக்கான விஜயம் இந்தியாவை ஏமாற்றுவதற்கான மற்றொரு நகர்வாகவே உள்ளது. இந்தியா தமது நட்பு நாடு என அவர்கள் நடிப் பார்கள். தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு விடயத்தில் இந்தியா தலையிடாமலிருப்பதை உறுதிப்படுத்துவதற்காகப் போலியான வாக்குறுதிகளை அவர்கள் வழங்குவார்கள்.

தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்குவது உட்பட, இந்தியாவுக்கு கடந்த காலங்களில் கொடுத்த வாக்குறுதிகள் எதனையும் இலங்கை அரசாங்கம் நிறைவேற்றவில்லை. இந்திரா காந்திக் குப் பின்னர் இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை தோல்வியையே சந்தித்திருக்கின்றது. அதன் விளைவாகத்தான் இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்திருக் கின்றது.

இருந்தபோதிலும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியில் நான் நம்பிக்கை வைத்துள்ளேன். அவரை எனக்கு தனிப் பட்ட முறையில் தெரியும். அவர் குஜ ராத் முதலமைச்சராக இருந்தபோது நான் அங்கு சென்றிருக்கின்றேன். அவர் இலங் கையின் போலி வாக்குறுதிகளை நம்பா மல் இலங்கை தொடர்பில் மிகவும் அவ தானமாக இருந்து, தீர்க்கமான செயல் பாடுகளை முன்னெடுப்பார் என நான் நம்புகின்றேன்.

தமிழ் மக்களுடைய சட்டரீதியான உரிமைகளை உறுதிப்படுத்தவும், அவர் களுடைய தொடர்ச்சியான இருப்பை உறுதிப்படுத்தவும் இந்தியப் பிரதமர் துணிச்சலாக செயல்படுவார் என இலங்கைத் தமிழ் மக்கள் எதிர்பார்க் கின்றார்கள். எம்மை வலுப்படுத்துவதற் காக இந்தியா எடுக்கக்கூடிய நடவடிக் கைகள் இந்தியாவின் பாதுகாப்புக்கும் உகந்ததாக இருக்கும். ஆக, பேராசிரியர் பீரிஸின் பேச்சு வன்மையில் இந்தியா ஏமாற்றுப்பட்டுவிடக்கூடாது என்பது தான் என்னுடைய ஒரே எதிர்பார்ப்பாக உள்ளது -என்றும் சொன்னார்.

## யாழ்...

பிரிவுக்குட்பட்ட பகுதியில் வாடகை அறையில் தங்கியிருந்துள்ள னர்.

இந்நிலையில், கலைப்பீட மாணவி ஒருவர் அடிக்கடி தொலைபேசியில் பேசி வருவதால் தனது கற்றலுக்கு இடை யூறாக இருக்கின்றது என மருத்துவபீட மாணவி பல தடவைகள் சொல்லியுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு கலைப்பீட மாணவி அதிக நேரம் தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்தபோது மருத்துவ பீட மாணவி இரண்டு, மூன்று தடவை கள் தனது கற்றலுக்கு இடையூறாக இருப்பதாகச் சுட்டிக்காட்டியபோதும், கலைப்பீட மாணவி அதனைப் பொருட் படுத்தவில்லை.

கோபமடைந்த மருத்துவபீட மாணவி தன்னுடைய தொலைபேசியைக் கலைப் பீட மாணவியின் முகத்தில் எறிந்துள் ளார். இதனால் இருவருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்ட நிலையில் நண்பர் களின் தலையீட்டால் சமரசம் செய்யப் பட்டது.

எனினும், இந்தத் தாக்குதலில் காய மடைந்த கலைப்பீட மாணவி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். (அ)

## பயங்கரவாத கைதி...

தடைசட்டத்தின் திருத்தங்கள் மற்றும் மனித உரிமைகள் பிரச்னைகளில் சிவில் சமூகத்தின் முக்கிய மான ஈடுபாடு விரோதத்தை சந்திப்பதை விட வரவேற் கப்பட வேண்டும்”, என்று குறிப்பிட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகளின் தரவுகளின்படி கடந்த 3 வருடங்களில் 600இற்கும் மேற்பட்டவர் கள் பயங்கர வாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ)

# அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய கொள்கலன்களைவிடுவிக்கநடவடிக்கை

### சுங்க அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ஆலோசனை

கொழும்பு, பெப். 08

சுங்கத் திணைக்களத்தின் வசமுள்ள அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்களை உடனடியாக விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித் துள்ளது.

சந்தையில் உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட் களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாதிருப்பதை இலக்கு வைத்தே, ஜனாதிபதியால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களைத் தட்டுப்பாடின்றி வழங்குவதற்காக, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையிலான குழு ஒன்றை நியமிக்கவும், ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார்.

சுங்கத் திணைக்களத்தின் வசமுள்ள அத்தியாவசியப் பொருட்களை விடுவிப்பது தொடர்பிலான விசேட கூட்டமொன்று, ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

பண்டிகை நாட்களில் உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட் களைத் தட்டுப்பாடின்றி பொதுமக்கள் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடு களைச் செய்ய வேண்டுமென்று எடுத்து ரைத்த ஜனாதிபதி அதற்காக தற்போதிருந்தே உரிய திட்டமிடல்களை வகுக்குமாறு, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

தெரிவு செய்யப்பட்ட சில அத்தியாவசியப் பொருட்களின் கொள்வனவுக்குச் சந்தர்ப்பம் வழங்குமாறும் இதன்போது, குறுகிய எண்ணங்களுடன் அதிகப்படியான பொருட்களை இறக்குமதி செய்வதற்கோ அல்லது பொருட் களைப் பதுக்கி வைப்பதற்கோ இடமளிக்கக் கூடாது என்றும் ஜனாதிபதி கூறினார். (ஐ)

# முன்னேஸ்வர ஆலயத்தின் பெருந்திருவிழா ஆரம்பம்!



புத்தளம், பெப். 08

வரலாற்று பிரசித்தி பெற்றதும் பஞ்ச ஈஸ்வரங்களில் முதன்மை பெற்றதும் சக்தி பீடங்களில் ஒன்றுமான சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீவடிவாம்பிகா சமேத ஸ்ரீமுன்னைநாதஸ்சுவாமி ஆலய பெருந் திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

ஆலய பிரதம குருவும் தர்மகர்த்தாவுமான கலாநிதி பிரம்மஸ்ரீ எஸ். பத்மநாபக் குருக்கள் தலைமையில் கொடியேற்றம் இடம்பெற்றது.

தொடர்ந்து அபிஷேகம் இடம் பெற்றதுடன் உற்சவ மூர்த்திகள் மாட வீதி உலா வந்து வசந்த மண்டப இருப்பிடம் சேர்ந்தனர்.

தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா இடம்பெறவுள்ளன. எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும் அடுத்த நாள் புதன்கிழமை தீர்த்த திருவிழாஇடம்பெறவுள்ளது. (ஐ)

## தொற்றுக்கு...

வயதுக்கு மேல் 11 ஆண்கள், 7 பெண்கள் என 18 பேர் என நேற்றுமுன்தினம் மட் டும் தொற் றால் 26 பேர் உயிரிழந்தனர்.

இந்த மரணங்களுடன் நாட்டின் மொத்த மரண எண்ணிக்கை 15ஆயிரத்து 621ஆக உயர்ந்துள்ளது. (ஐ)

## ஜெங்சங்கருடன்...

நடவடிக்கைகள் குறித்து இதன் போது அவதானம் செலுத்தப்பட்டதாக எஸ்.ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

மேலும், மீனவர்கள் விவகாரம் குறித் தும், இரு தரப்பு பொறிமுறைகளை முன் கூட்டியே மேற்கொள்வது தொடர்பாக வும் இச்சந்திப்பில் பேசப்பட்டதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் கூறினார்.

வெளிவிவகார அமைச்சர் பீரிஸுடன், இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொரகொட மற்றும் டில்லியில் உள்ள இலங்கை தூதரகம் மற்றும் வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஸ்ரீ ஹர்ஷ்வர்தன் ஷ்ரிங்லா, இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே மற் றும் இந்திய வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரிகளும் இந்திய வெளிவிவ கார அமைச்சருடன் பங்கேற்றனர். (அ)

## யாழ்ப்பாணத்தில்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் 6 பேருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் இருவருக்குமாக யாழ்ப்பாணத்தில் 8 பேருக்கும், கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 48 பேருக்கு நடத்தப்பட்ட பி. சி. ஆர். சோதனையில் 8 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர்கள் அனைவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையை சேர்ந்தவர்களாவர். (ஐ)

## வரணியில்...

சட்டவிரோத மதுபான உற்பத்தி இடம்பெறுவதாக விசேட அதிரடிப் படையினருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து சிவில் உடையில் இருந்தவர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்து சாவகச் சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க் கப்பட்டார்.

இதையடுத்து, விசேட அதிரடிப்படை யினர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத் தப்பட்டனர். அவர்களை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# அமைச்சுக்களின் செலவை கட்டுப்படுத்த அறிவுறுத்தல்!

கொழும்பு, பெப். 08

பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கான செலவுகளை மேலும் கட்டுப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நிதியமைச்சு ஏற்கனவே அனைத்து அமைச்சர்கள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் தொடர்ச்சியான சிறப்பு அறிவுறுத்தல்களை அனுப்பியுள்ளது.

வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள திட்டங்களைத் தவிர வேறு எந்த திட்டங்களுக்கும் நிதி கோருவதைத் தவிர்க்குமாறு அனைத்து அமைச்சர்கள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு நிதியமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

மேலும், டிசம்பர் 21ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கையிலும், ஜனவரி 12 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரசின் செலவினங்களைக் கட்டுப்படுத்தும் சுற்றறிக்கையிலும் உள்ள உத்தரவுகளை கண்டிப்பாக அமுல்படுத்தவேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

ஒருங்கிணைக்கப்பட்ட நிதியிலிருந்து எரிபொருள் கொடுப்பனவுகளைப் பெறும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்களின் எரிபொருள் செலவினங்களை மட்டுப்படுத்தவும் அது அறிவுறுத்தியுள்ளது.

மேலும், தொலைபேசி மற்றும் மின்சார செலவுகள் போன்ற அரச நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் அனைத்து செலவுகளையும் கண்டிப்பாக கட்டுப்படுத்துமாறு நிதியமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (அ)

# பூசகரை கடத்தி நகைகள் பறிப்பு சந்தேகநபர்களில் ஒருவர் கைது!

வடமராட்சி, பெப். 08

பூசகர் ஒருவரை கடத்திச் சென்று அவரிடம் இருந்த நகைகளை கொள்ளையிட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தும்பளை பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வீதியோரமாக நின்ற பூசகரை கடத்திச் சென்று அவரிடம் இருந்த ஒன்றரை பவுண் தங்க சங்கிலி மற்றும் மோதிரம் என்பன அபகரித்து செல்லப்பட்டதாக பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இது தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் நேற்று சந்தேகநபர் ஒருவரை கைது செய்தனர். வேறு சிலர் தலைமறைவாகிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ - 2)

# 1 இலட்சம் மெற்றிக் தொன் அரிசி மியன்மாரில் இருந்து இறக்குமதி!

கொழும்பு, பெப். 08

சந்தையில் ஏற்பட்டுள்ள அரிசி விலை அதிகரிப்பை கட்டுப்படுத்துவதற்காக மியன்மாரிலிருந்து ஒரு இலட்சம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு வர்த்தக அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஒரு மெற்றிக் தொன் அரிசியை 445 அமெரிக்க டொலர் என்ற அடிப்படையில், அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தினூடாக இறக்குமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

ஒரே நேரத்தில் 20,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்து அவ்வப்போது சந்தைக்கு விநியோகிக்க வர்த்தக அமைச்சு எதிர்பார்க்கிறது.

அரிசி இறக்குமதி செய்வதற்கு தேவையான அந்நிய செலாவணியை மக்கள் வங்கிக்கு வழங்குமாறு வர்த்தக அமைச்சு மத்திய வங்கியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# ராகமை மருத்துவபீட மோதல் கைதான 9 பேருக்கு பிணை

கொழும்பு, பெப். 08

ராகம மருத்துவ பீட மாணவர்களை தாக்கிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோவின் மகன் உள்ளிட்ட 9 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

சந்தேக நபர்கள் நேற்று வத்தளை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ராகம மருத்து பீட மாணவர் விடுதி வளாகத்துக்குள் நுழைந்த இனந்தெரியாத குழுவினரால் கடந்த முதலாம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் அந்த பீடத்தின் 4 மாணவர்கள் காயமடைந்தனர்.

இந்நிலையில், இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ராகம பொலிஸார் முன்னாள் இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோவின் மகன் மற்றும் மருத்துவ பீட மாணவர்கள் என 9 பேரை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

இதனையடுத்து. சந்தேக நபர்களை நேற்று வரை விளக்கமறியலில் வைக்க வத்தளை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ)

# பம்பைமடு பகுதியில் ஹன்ரர் கட்டுப்பாட்டையிழந்து விபத்து

வவுனியா, பெப். 08

வவுனியா, பம்பைமடுப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மதியம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மன்னார் வீதியூடாக வவுனியா நோக்கிச் சென்ற ஹன்ரர் ரக வாகனம் ஒன்று வவுனியா, பம்பைமடு பகுதியில் உள்ள வவுனியா பல்கலைக்கழகம் முன்னால் பயணித்தபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் ஹன்ரர் வாகனச் சாரதியும், நடத்துநரும் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்த இருவரும் அம்புலன்ஸ் மூலம் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

விபத்து தொடர்பில் பூவரசன்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# மேலும் 454 பேர் பூரண குணம்

கொழும்பு, பெப். 08

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த மேலும் 454 பேர் பூரணமாக குணமடைந்த வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய, கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 581,659 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, , நாட்டில் இதுவரை கோவிட் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 618,520 ஆக அதிகரித்துள்ளது.

அதேபோல் நாட்டில் இதுவரை 15,595 பேர் கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளனர். (அ)

# வத்தேகம பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் மூவர் மரணம்

கொழும்பு, பெப். 08

வத்தேகம-மடவல பிரதேசத்தில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் 3 பேர் மண்ணுக்குள் புதையுண்டு உயிரிழந்துள்ளதோடு, ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீட்டு கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோதே இவ்வாறு மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# மான், பன்றி இறைச்சியை வைத்திருந்த இருவர் கைது

கொழும்பு, பெப். 08

உலர்த்தப்பட்ட மான் இறைச்சி மற்றும் காட்டுப் பன்றி இறைச்சியுடன் கட்டுத் துப்பாக்கி வைத்திருந்த சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குருவிட்ட-எக்னெலிகொட பிரதேசத்தில் இரண்டு கிலோ உலர்த்தப்பட்ட மான் இறைச்சி மற்றும் கட்டுத் துப்பாக்கி ஒன்றுடன் சந்தேக நபர் ஒருவர் சமனல மற்றும் பலாபத்தல இயற்கை வன பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, 9 கிலோ காட்டுப் பன்றி இறைச்சி வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை பெலிஹுல்ஓய இயற்கை வனப் பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய் தனர். (அ)

# 1.5 லீற்றர் போத்தலில் அடைத்த குடிதண்ணீரின் விலை 90 ரூபா!

கொழும்பு, பெப். 08

500 மில்லி லீற்றர் குடிதண்ணீருக்கான விலை 50 ரூபாவாகவும், ஒரு லீற்றர் குடிதண்ணீருக்கான விலை 70 ரூபாவாகவும், 1.5 லீற்றர் குடிதண்ணீருக்கான விலை 90 ரூபாவாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீருக்கான புதிய விலைகள், இலங்கை போத்தல் குடிதண்ணீர் சங்கத்தினரால் அறிவிக்கப் பட்டுள்ளது. அத்தோடு, 5 லீற்றர் போத்தல் குடிதண்ணீரின் விலை 200 ரூபாவாகவும், 7 லீற்றருக்கான விலை 240 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

போத்தலில் அடைக் கப் பட்ட குடிதண்ணீருக் கான கட்டுப்பாட்டு விலைகள், அண்மையில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் நீக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், போத்தல் குடிதண்ணீருக் கான புதிய விலைகளை போத்தல் குடிதண்ணீர் சங்கம் நேற்று அறிவித்துள்ளது.










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.02.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து - உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர் - மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - தலைவா,ஜா ஜா திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ் - வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்



**இரவு**
7.00 மணி : கதை நேரம் - நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை - இலக்கிய நிகழ்ச்சி
10.00 மணி : BLACK AND WHITE

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டூ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகக்கோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு